



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

31 MAY 2005



# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)
ஆசிரியர்:
செஞ்சொற்செல்வர்
திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்
துணை ஆசிரியர்:
சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்
2005 பார்த்திப வருடம் வைகாசி மாதம்
வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை.
மலர் 34

## அலை கடல் ஆட்கொண்ட ஆலயங்கள்


கடந்த ஆண்டு மார்கழி மாதம் இயற்கையின் சீற்றத்தால் இடர்பட்ட இந்து ஆலயங்களின் நிலைபற்றி யாரும் சிந்திப்பதாக இல்லை. பொதுமக்களின் எல்லையில்லாத உயிர் இழப்புகளின் அவலம் அனைவரையும் துயரில் நிலைகுலையச் செய்தது. பாதிப்புற்ற மக்கள் பற்றிய ஆய்வுகளும் அவர்களுக்கான எதிர்கால விருத்திகள் பற்றியும் சர்வதேச ரீதியில் தொடர்ந்து நடவடிக்கைகள் பற்றிய விடயங்கள் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. எனினும் இந்து மதத்தவர்களது ஆலயங்கள் மடங்கள் நிறுவனங்களின் இடர் குறித்து ஆராய வேண்டியது அவசியமாகும். கடல் சூழ்ந்த கிராமங்களில் வாழ்ந்த ஏழைத் தொழிலாளர்கள் தம் பாரம்பரிய குல தெய்வங்களுக்கு கோயில் கட்டிப் பாதுகாத்து வந்தனர். இவற்றில் பல திருக்கோவில்கள் பாரிய சேதத்துக்கு உள்ளாகியுள்ளது. கிழக்கு மாகாணத்தில் பல பெரிய கோவில்கள் இருந்த இடமே தெரியாது கடல் அலை பெயர்த்து அழித்துவிட்டது. இத்திருக்கோவில்கள் மீண்டும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் நிலையங்களாக விளங்கவேண்டும். வடமராட்சி தொடக்கம் மட்டக்களப்பு வரை அழிந்து போன இந்துக் கோவில்களை சமுதாய நிறுவனங்கள் அக்கறையோடு புனர்நிர்மாணம் செய்ய வேண்டியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமாகும். புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களால் உருவாக்கப்பட்ட இந்து கோவில்கள் சமய நிறுவனங்கள் இவ்விடயத்தில் மிகுந்த அக்கறை செலுத்தவேண்டும். 1977 முதல் நமது நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரங்களால் அழிந்து போன பல இந்துக் கோவில்கள் அருகி விட்டன. திருக்கோணமலை மாவட்டத்தில் இதுவரை புனர்நிர்மாணம் செய்யப்படாத பல கோவில்கள் இன்றும் உள்ளன. குறிப்பாக வரலாற்றுச் சிறப்புடைய கன்னியா வெந்நீர் ஊற்றுக்கு அருகில் உள்ள பழம்பெரும் திருக்கோவில்கள் அழிந்த நிலையிலேயே காணப்படுகின்றன. இந்நிலையில் ஆழிப் பேரலையால் பல இந்துக் கோவில்கள், கோவில் உடமைகள் அழிந்து போயுள்ளன. ஏனைய மதத்தவர்கள் நிறுவன ரீதியில் தமது ஆலயங்கள் நிறுவனங்கள் பற்றிய அழிவின் மதிப்பீடுகளை உலகளாவிய ரீதியில் வெளிப்படுத்தி வரும் வேளை, இந்து மதத்தவர்களின் வழிபாட்டுத் தலங்களின் இழப்பீடு பற்றிய கருத்துக்கள் ஆராயப்படாமல் இருப்பது கவலைக்குரியது. இந்து நிறுவனங்கள் ஒன்றிணைந்து அழிந்து போன கோவில்களை மீள புனர்நிர்மாணம் செய்யும் பணியில் ஈடுபட வேண்டியது கட்டாயமான கடமையாகும்.


## சிவபூமி கண்தானச் சபை

தானங்களில் சிறந்த தானமான கண் தானத்தைச் செய்ய முன்வாருங்கள்
உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு
ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே
இப்புண்ணிய காரியத்துக்
ஒப்புதல் தாருங்கள்.




தொடர்புகளுக்கு:
ஆறு.திருமுருகன்
தொலைபேசி
021-222 6550

கண் வைத்திய நிபுணர்கள்:
Dr. ச. குகதாசன், 021-222 3645
Dr. சிவந்தா, 021-222 3149
யாழ்.போதனா வைத்தியசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோரும் இன்புற்றிருக்க சைவநெறியில் வாழ்வோம்.

**கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்**

இப்பூமியில் வாழுகின்ற மனிதர்கள் யாபேரும் மகிழ்ச்சியை விரும்புகிறார்கள். ஆயினும் மகிழ்ச்சியாக இருப்பவர்கள் மிகச்சில்ரே. அதுவும், சிற்சில நேரங்களிலேயே மகிழ்ச்சியாக இருக்கின்றனர். வாழ்க்கையில் பெரும்பகுதி மகிழ்ச்சியாக இருப்பதில்லை என்று கூறப்படுகிறது. அதனால், மனிதர்கள் இறைவனைப் பிரார்த்திக்கும் பொழுதெல்லாம் தமக்கு வாழ்க்கையில் மகிழ்ச்சி வேண்டிப் பிரார்த்திக்கிறார்கள். இறைவனை வேண்டுதல் செய்யும் போதெல்லாம் தமக்கு மகிழ்ச்சியும் இன்பமும் வேண்டும் என்று கேட்க எவரும் மறப்பதில்லை. ஆனால் பிறருக்கு மகிழ்ச்சி வேண்டி இறைவனைப் பிரார்த்திப்பவர்கள் எத்தனை பேர், என்பது கேள்விக்குறியாக உள்ளது. பிறர் மகிழ்ச்சியாக இல்லாதபோது, நாம் மட்டும் எவ்வாறு மகிழ்ச்சியாக இருக்கமுடியும் என்பதைப் பலர் சிந்தித்துப் பார்ப்பதில்லை. எல்லோரும் இன்புற்றிருந்தாலேயே நாமும் இன்புற்றிருக்கலாம் என்பது சைவம் காட்டும் உண்மை நிலை. அதனை நாம் உணர்ந்து கொண்டால் நாம் எல்லோரினதும் நன்மைக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் பிரார்த்தனை செய்யவேண்டும் என்னும் விழுமிய நிலைப்பாடு எம்மில் தோன்றிவிடும்.

நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்காகப் பிறரும் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் எனப் பிரார்த்திப்பதும் ஒரு வகையில் சுயநலம் தான். இருப்பினும் அது நன்மை பயக்கும் சுயநலம் என்பதால் பாதகமில்லை.

**"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"** என்கிறார், சமரச சன்மார்க்க ஞானியாகிய தாயுமான சுவாமிகள்.

**"இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க"** என்பது சைவத்தின் குரல் ஆக உள்ளது. சைவமக்கள் இவ்வாசகங்களை உரக்கக் கூவிக் காற்றோடு காற்றாகக் கலக்கச் செய்து விடுதலோடு மாத்திரம் அமைந்து விடாது, வாழ்க்கையில் அவற்றைச் செயற்பாடுகளாகவும் மாற்றிவிடுதல் அவசியமாகும். கோட்பாடுகள் செயற்பாடுகள் ஆகும் போதே; பலன் கிடைக்கின்றது.

மகிழ்ச்சியாக இருப்பதற்குச் சில வழிமுறைகளைப் பெரியோர்கள் கூறியுள்ளனர். சிலவற்றை நோக்குவோம்;

- காலையிலும் மாலையிலும் சில நிமிட நேரம் ஓரிடத்தில் அமைதியாக இருத்தல். மனதை அலையவிடாமலும், மௌனமாகவும் அமர்ந்திருத்தல், இதற்கு அடிப்படை நிபந்தனையாகும்.

- மனதில் உறுதி, பேச்சில் இனிமை, செயலில் நன்மை என்பவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிறர் நலமாக வாழவேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருத்தல்.
- உடன்பாட்டுச் சிந்தனைகளை மனதில் வளர்த்தல்; எதிர்மறைச் சிந்தனைகளை அடியோடு களைதல்;
- எல்லாவற்றிலும் நல்ல அம்சங்களையே பார்த்தல் இருண்ட பக்கத்தைப் பாராது விடுதல்.
- கடந்த காலத் துன்பங்கள், துயர்களை அடிக்கடி மீட்டுப் பாராது இருத்தல். நடந்தவை நடந்தவைதான், இனிமேல் நடக்கப்போபவை நன்மையாக நடக்கட்டும் என நினைத்தல்.
- எல்லாம் நன்மைக்கே என்ற உணர்வினை வளர்த்தல்,
- எல்லோர் மீதும், எல்லா உயிர்கள் மீதும் அன்பாயிருத்தல்.
- பொறாமை, ஆசை, கோபம், இன்னாச்சொல் ஆகியவற்றைத் தவிர்த்தல்.
- போதும் என்ற மனம், பொன் செய்யும். மருந்து என்பதை ஏற்று, வாழ்க்கையில் திருப்தி கொள்ளல்.
- எம்மை எம்மோடு ஒப்பிட்டுப் பார்த்தல்; பிறரோடு ஒப்பிடாதிருத்தல்.
- வெளியிலிருந்து நல்லனவற்றை மட்டும் மனத்துள் புக அனுமதித்தல், அல்ல வற்றைப் புக அனுமதியாது தடுத்தல்.
- இறைவனில் அசையாத நம்பிக்கை கொள்ளல். எல்லாம் அவன் செயல் என எண்ணி, சமநோக்கினைக் கொண்டிருத்தல். சமநோக்கு என்பது இன்பம், துன்பம்; நன்மை, தீமை என்பவற்றை சமமாக ஏற்றுக்கொள்ளுதல்.
- "**இடுக்கண் வருங்கால் நகுக**" என்னும் வள்ளுவர் வாக்கினைத் தலைமேற் கொள்ளல். ஈற்றில் வாழ்க்கையின் உண்மை நிலையைத் தெரிந்து இன்பத்தில் இறுமாப்பு எய்தாமலும், துன்பத்தில் துவளாமலும் இருத்தல்.

சைவநெறியில் நின்று வாழ்வதன் மூலம் நாமும் மகிழ்ச்சியடையலாம்; பிறரையும் மகிழ்ச்சியாக வாழவைக்கலாம் என்பதை உணர்வோமாக.

## "அருள்ஒளி" வாசகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

**"அருள்ஒளி" மாதம் தோறும் வெளிவந்து கொண்டு இருக்கிறது. இம்மலருக்கு பொருத்தமான தரமான ஆக்கங்களை நாம் எதிர்பார்க்கிறோம். நீங்கள் எங்களுக்கு அனுப்ப வேண்டிய முகவரி**

ஆசிரியர்
**"அருள்ஒளி"**
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஆசிரியர்
**"அருள்ஒளி"**
திருமகள் அழுத்தகம்,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினை விடுதல்

திரு. க.சிவசங்கரநாதன் அவர்கள்
(சரசாலை)

மனிதன் வாழும்போது பலபொருள்களிலே பற்றுக்கொள்கின்றான். பல மக்களோடு தொடர்புபட்டு அவர்களுடைய நலந்தீங்குகளுக்காக அவன் கவலை அடைகிறான். மண் என்றும் பொன் என்றும் பெண்ணென்றும் ஆசைப்படுகிறான். இத்தகைய ஆசையினால் அவன் மேலும் மேலும் துன்பத்தையே அடைகிறான் ஆசை உண்டானால் அதனுடன் தொடர்ந்து பொறாமை பகை முதலிய தீய குணங்களும் வந்துவிடும் அதனால் இம்மை வாழ்வில் அவன் பிறமக்களால் துன்புறுகிறான் தானே பலவற்றை நினைந்திரங்கி ஏங்கித் துயருறுகிறான் அதனால் தான் திருமூலர்

**"ஆசைப்படப்பட ஆய்வரும் துன்பம்**
**ஆசை விடவிட ஆனந்தம் ஆமே"** என்றார்.

மக்கள் யாவருமே துறவியாக முடியாது. புறத்தே துறப்பதை விட அகத்தே துறப்பது சிறந்தது. ஒருவன் இல்வாழ்வில் வாழ்வது தவறு அன்று. பொருளை ஈட்டுவதும் தவறு அன்று. ஆனால் அந்தப் பொருளிலே பற்றுக்கொண்டு அதைச் சேமிப்பதில் நாட்டமுடையவனாகிப் பிற கடமைகளைப் புறக்கணித்து வாழ்வதுதான் தவறு அதற்கு மாற்று தான் பெற்றபொருளை அறத்தாற்றிலே செலவிடுதல். அப்படிச் செய்வதனால் அவனுக்குப் பொருளின்பால் உள்ள பற்று அறும். மேலும் மேலும் அறம் செய்யப் பொருள் ஈட்டும் முயற்சி அறாது. ஆதலின் மனித வாழ்க்கையில் முதற்கண் கடைப்பிடிக்க வேண்டுவது அறம் என்று வைத்தார்கள். அறம் என்பது மனிதன் செய்ய வேண்டிய பல கடமைகளையும் குறிக்குமாயினும் அக்கடமைகளில் நிலையாது ஈகை ஔவையார் **"ஈதல் அறம்"** என்று கூறினார்.

தான் பெற்ற பொருளைப் பிறருக்கு ஈயும் போது அதைப் பெறுபவர்களிடம் இரக்க உணர்ச்சி எழுவது இயல்பு. அந்த உணர்ச்சி இருந்தால் தான் கரவாமல் கொடுக்கத் தோன்றும் அதுமட்டும் போதாது இறைவனுடைய நினைப்பும் உடன் இருக்க வேண்டும் இரப்பவர்களும் இறைவனுடைய குழந்தைகள் என்பதையும் முன்னைப் பிறவியில் செய்த தீவினையின் பயனாக அவர்கள் இரக்கிறார்கள் என்றும், தான் செய்த நல்வினையின் பயனாக அவர்களுக்கு ஈயும் நிலை தனக்கு அமைந்திருக்கிறதென்றும் இந்த இரண்டு நிலைகளையும் உண்டாக்கி அருள்பாலிப்பவன் இறைவன் என்றும், தான் கொடுப்பதனால் உயர்ந்தவனாவதில்லை என்றும் எண்ணும் மனப்பாங்கு அப்போது அவனுக்கு உண்டாகும். இரப்பவர்களைக் கண்டு அவமதிப்பும் ஈவதனால் ஏற்படும் செருக்கும் அவனிடம் உண்டாவதில்லை. இறைவன் ஈகைக்கு ஒரு கருவியாகத் தன்னை வைத்தானே என்று நினைந்து உருகுவான்.

இத்தகைய உண்மை உணர்ச்சி வந்தால் அவன் உள்ளம் தெளிவுபெறும் கலக்கமின்றி வேதனையின்றி நிலவும் பிறவி தோறும் வருகின்ற நீண்ட வேதனைகளாகிய கோபதாபங்கள் இந்த மனப்பாங்கினால் அழியும் இறையுணர்வாகிய தீயின் முன் அந்த வேதனைகள் தூள்பட்டுப் போகும் எரிந்து சாம்பலாகி விடும்.

**"கெடுவாய் மனமே கதிகேள் கரவா**
**திடுவாய் வடிவேல் இறைதான் நினைவாய்**
**சுடுவாய் நெடுவே தனைதூள்படவே**
**விடுவாய் விடுவாய் வினையா வையுமே"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை உணர்வு வளரவளர அறமும் வளரும் அதனால் அவனைச் சார்ந்திருந்த முன்னை வினைகள் ஒத்துநிற்கும் இருவினை ஒப்ப உண்டாகும் அதனைத் தொடர்ந்து மலபதிபாகமும் சத்தினி பாதமும் அமையும் ஞானம் கைகூடும். அப்போது அவன் வினைகளின் தொடர்பின்றி வாழ்வான் யான் எனது என்னும் செருக்கு அறுத்துச் செயல் மாண்டு நிற்றலால் அவனை எந்த வினையும் சாராது வினையாவையும் அவனை விட்டுவிடும் அவன் எல்லா வினைகளையும் விட்டுத் தூயவனாய் இறையருளின்ப அனுபவத்திலே தேங்கியவனாய் நிற்பான்.

பக்தியின் உச்சநிலையில் நின்றவர்கள் ஈகையிலே சிறந்து நின்று இன்பதுன்ப எல்லைக்கு அப்பாலே இறையருள் இன்பத்தை நுகர்ந்து வாழ்ந்ததற்குப் பெரிய புராணம் சான்று பகர்கிறது. இயற்பகையார் இளையான் குடிமாறநாயனார் போன்றவர்கள் அவ்வாறு நின்றவர்கள். உலக வாழ்வில் ஈடுபடுத்திப் பொறி இன்பம் நுகர்வதற்குக் கருவியாய் நிற்பது பொருள். மண்ணாசை பெண்ணாசை என்னும் இரண்டையும் விட அது விரிந்தது. அரசர் மண்ணாசை கொள்வர் பருவமுடையார் பெண்ணாசை கொள்வர். பொன்னாசையோ எல்லோரையும் பற்றுகிறது. அதனை விடுவது எளிதன்று வயோதிபனும் தன் துணியில் ஒரு ரூபாவையாவது முடிந்து வைத்துக்கொள்ள ஆசைப்படுகிறான். ஆதலின் அதை மாற்றத் தொடங்கினால் மனம் வேதனை நீங்கித் தெளிவு பெறும். அதற்கு வழி பற்றறுத்தலும் பற்றற்றான் பற்றினைப் பற்றுதலும் ஆகும் என அருணகிரியார் மேற்படி பாடலில் சொல்லியுள்ளார்.

# சின்னஞ்சிறு தகவல்கள்

**சைவ சமயத்தவர்கள் அதிகாலையில் நித்திரைவிட்டெழுந்ததும் சிந்திக்க வேண்டிய நல்ல சிந்தனைகளில் இடம்பெற வேண்டிய பன்னிரண்டு ஜோதிலிங்கத்தலங்களும் உண்டு.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | சோமநாதர் | 2. | மல்லிகார்ச்சுனர் | 3. | மகாகாளர் | 4. | திரயம்பகர் |
| 5. | ஓங்காரேஷ்வரர் | 6. | வைத்தியநாதர் | 7. | பீமசங்கரர் | 8. | இராமநாதர் |
| 9. | நாகேஷ்வரர் | 10. | விசுவநாதர் | 11. | கேதாரநாதர் | 12. | சூஸ்மேசர் |

என்பன பன்னிரண்டு ஜோதிர்லிங்கமூர்த்திகளாகும்.

**சிவபெருமானிடமிருந்தே சிவலிங்கம் பெற்றவர் சிலர் உண்டு.**

இராவணன் சிவபிரானிடமிருந்து ஆத்மலிங்கத்தையே கேட்டு வாங்கியவன்.

பிள்ளையார் இடையில் வந்து நடனமாடி அதனைப் பறித்துக்கொண்டார்.

ஆதிசங்கரர் ஐந்து லிங்கங்களைப் பெற்றவர். இறைவனே உவந்து அருளிய அவை, சங்கரருடைய கையாலேயே ஐந்து தலங்களில் பிரதிஷ்டை பண்ணப்பட்டார்.

**சிவபெருமான் சோமசுந்தர பாண்டியராக மதுரைக்கு வந்து மீனாட்சி அம்மையை மணமுடித்துப் பாண்டிய நாட்டை அரசுசெய்தார்.**

அக்காலத்தில் அவர் நித்தமும் தமது திருக்கரங்களால் சிவபூசை செய்தார். அந்தச் சிவலிங்கம் "அப்பன் கொல்லை" என்ற இடத்தில் இப்போதும் உள்ளது.

**நன்றி: ஜதீஸ்வரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சக்ர பூஜை

பிரம்மஸ்ரீ கி. சதாசிவசர்மா அவர்கள்
மட்டுவில்.

"சரணாகத தீனார்த்த பரித்ராணபராயனே!
சர்வஸ்யார்த்தி ஹரேதேவி நாராயணீ நமோஸ்துதே!"

அன்னை பராசக்தியைப் போற்றுதற்கு உருவ வடிவிலும் கும்பவடிவிலும், சக்ர(யந்திர) வடிவிலும் வழிமுறைகள் அமைந்திருக்கின்றன. உருவ வழிபாட்டின் போது அபிஷேகங்கள், அலங்காரங்கள் ஆராதனைகளும், கும்பவடிவில் சக்தியை குருமூலமாக ஆவாகனம் தியானம் அலங்காரம் உபசாரம் என்பவைகளும் பூஜைக்குரியனவாகின்றன.

யந்திர வழிபாட்டின்போது, ஸ்தானம் தியானம் ஆவாகனம், அபிஷேகம், உபசாரம், ஆவரணபூஜை, தர்ப்பணம், ஹோமம் என்பன அங்கங்களாகின்றன. இவ்விதம் அம்பிகையை யந்திரத்தில் (சக்ரத்தில்) வழிபடும்போது ஸ்ரீ சக்ரபூஜை என சிறப்பாக குறிப்பிடுகிறோம். சுமங்கலீ, சுககரீ, சுவேஷாட்யா, சுவாசினீ எனப்பலவித அழகு ரூபமாக ஆராதனைக்குரியவளான தேவியை "**ஸ்ரீ**" என்னும் சொல்லினால் அழைத்து யந்திரத்தில் பூசிப்பதால் "**ஸ்ரீசக்ரபூஜை**" என்று சிறப்பு வழிபாட்டுக்குரியதாயிற்று.

பூஜிக்கப்படும் ஸ்ரீசக்ரம் பூப்ரஸ்தம் மேருப்ரஸ்தம் என இரு வகையாக அமைக்கப்படும். இதில் முதலாவது பூமி போல சமதளத்தில் தங்கம் செப்பு வெள்ளி ஆகிய தகடுகளால் அமைத்து அதில் எழுத்துகளின்றி ரேகைகளால் (கோடுகளால்) வரையப்பட்டுள்ளது. அக்ஷரங்களின்றி கோணங்கள் ரேகைகளால் பூஜிக்கப்படும் சிறப்பு ஸ்ரீ சக்ரத்திற்கு மட்டுமேயுண்டு.

மேருப்பிரஸ்தம் (மலைபோல் உயரமாக) பூபுரம் முதல் பிந்துவரை ஒன்பது சக்ரங்களும் படிப்படியாக மேலுயர்ந்ததாகவும், பூபுரம் தளமாகவும் பதினாறிதழ், எட்டிதழ் கமலங்கள் ஒன்றன்மேலுயர்ந்தும் அதன்மேல் ஆறுசக்ரங்களும் உயர்ந்த தளமாகவும் கொண்ட மூன்று வகையாக காணப்படுகின்றன.

பூபுரம் முதல் பிந்து (மத்தி) சக்ரம்வரை ஒன்பது ஆவரணங்களில் வெளியிலிருந்து உள்வரை சம்ஹாரக்கிரமத்தில் பூஜை செய்யப்படுகின்றது. (ஆவரணம் என்பது மறைப்பு இம்மறைப்பு நீங்கும்வரை மனதில் பாவனையாக அப்பியாசம் செய்யவேண்டும் இதுவே ஆவரணபூஜையின் உட்கருத்தாகும்)

1-ம் ஆவரணம் பூபுரம் என்னும் மூன்று சதுரங்களை கொண்டதாகவும் திரிபுரா சக்ரேஸ்வரியை ஆவரண தேவதையாகவும், மத்திய ரேகையில் ப்ராமி, மகேஸ்வரி முதலிய அஷ்ட மாதாக்களையும், மூன்றாவது ரேகையில் பத்தமுத்திரா சக்திகளை அடக்கியதாகவும் "அணிமா" சித்தியைக் கொடுப்பதாகவும் 2-ம் ஆவரணம் பதினாறு இதழ்களை உடையதாய் 'சர்வசாபரிபூரகம்' என்னும் பெயருடன், திரிபுரேசி என்னும் சக்தியையும் பஞ்சப்பிராணன்கள், பஞ்ச ஞானேந்திரியங்கள், பஞ்ச கர்மேந்திரியங்கள், என்னும் பதினாறையும் தேவதைகளாகக் கொண்டும் 'லகிமா' சித்தியை அளிப்பதாகவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் ஆவரணம் எட்டு இதழ்களை உடையதாய் 'ஸர்வஸம்க்ஷோபனம்' என்னும் பெயருடையதாய், திரிபுரசுந்தரி என்னும் சக்தியைக் கொண்டும் அனங்க குசுமாதேவி முதல் அனங்க மாலினி வரையுள்ள அஷ்டதேவிகளைத் தேவதைகளாகக் கொண்டும் 'மகிமா' சித்தியை அளிப்பதாகவும் நான்காம் ஆவரணம் பதின்நான்கு முக்கோணங்களை உடையதாய் 'சர்வசௌபாக்ய தாயகம்' என்னும் பெயருடையதாய் திரிபுரவாசினி என்னும் சக்தியுடன், பதினான்கு புவனங்களை தேவதைகளாகக் கொண்டதாய் 'ஈசித்வ' சித்தியை வழங்குவதாகவும் ஐந்தாம் ஆவரணம் பத்து முக்கோணங்களை உடையதாய் ஈசித்வசர்வார்த்த சாதகம் என்னும் பெயருடன் திரிபுராஸ்ரீ என்னும் சக்ரேஸ்வரியோடு சர்வசித்திப் பிரதாமுதல், சர்வாங்க சுந்தரி வரையான, பத்துத் தேவதைகளைக் கொண்டதாகவும் 'வசித்துவ' சித்தியை அளிப்பதாகவும் ஆறாம் ஆவரணம், பத்து முக்கோணங்களைக் கொண்டதாகவும், சர்வரக்ஷாகரச்சக்ரம் என்னும் பெயருடன், திரிபுரமாலினி சக்ரேஸ்வரியோடு சர்வவஜ்ஞாதேவி முதலான பத்து கலாதேவிகளைக் கொண்டதும் "பிராகாம்ய" சித்தியைக் கொடுப்பதாயும், ஏழாம் ஆவரணம் எட்டுக் கோணங்களைக் கொண்டதாய் சர்வரோகஹரச் சக்ரம் எனும் பெயருடன் திரிபுராசித்தா எனும் தேவியுடன் வசினி என்னும் பெயர்முதல், கௌலினி வரையுள்ள வாக்தேவதா சித்திகளைக் கொண்டதாகவும் "புத்தி" எனும் சித்தியை அளிப்பதாகவும், எட்டாம் ஆவரணம் முக்கோண வடிவம் கொண்டதாய், சர்வசித்திப் பிரத சக்கரம் எனும் பெயருடன் "திரிபுராம்பா" என்னும் சக்ரேஸ்வரியுடன் பாணம் முதல் பிரம்ம சக்ரம் முதலான ஆயுதங்களைத் தேவதைகளாகக் கொண்டும் 'இச்சா' சக்தியைக் கொடுப்பதாகவும் ஒன்பதாம் ஆவரணம் ஸ்ரீசக்கர மத்தியில் உள்ள 'பிந்து' (சிறியதுளி) வடிவத்தில் ஸர்வானந்தமயச் சக்கரம் என்னும் பெயருடன் மகா திரிபுரசுந்தரீ என்னும் சக்தியைத் தேவதையாகவும் சர்வகாம சித்தியைக் கொடுப்பதாயும் இவ்வொன்பது ஆவரணங்களிலும் அம்பிகை ஆராதிக்கப்படுகிறாள்.பிந்து வடிவமாக விளங்கும் இவ்விடம் ஸ்ரீநகரம் என அழைக்கப்படுகிறது.

"ஸ்ரீமந்நகர நாயிகா" என்று லலிதா சகஸ்ர நாமத்திலும் போற்றப்படும் இச் ஸ்ரீநகரம் சகலப் பிரம்மாண்டங்களிற்குமப்பால் அமிருதமயமான சமுத்திரத்தின் மத்தியில் மகா மேருமலையில் ஸ்வர்ண மயமாய் பிரகாசிக்கும் மூன்று சிகரங்களுக்கும் மத்தியில் விளங்குவதாய் விஸ்வகர்மா என்னும் தேவசிற்பியினால் நிர்மாணிக்கப்பட்டதாய் பிரகாசிப்பதாகும். இதன் வெளிப்புறம் இரும்பு செம்பு பித்தளை முதலிய லோகங்களால் செய்யப்பட்ட கோட்டையாகும். இக்கோட்டையின் உள்ளே புஷ்பராகம் பத்மராகம் கோமேதகம் வஜ்ரம் முதலிய நவரத்தினங்களால் அமைக்கப்பட்ட பிரகாரங்களும், அவற்றைக் கடந்து மனோபயம், புத்திமயம், அகங்காரமயம், சூர்யகாந்தம், சந்திரகாந்தம், சிருங்காரம் எனும் 'மகாபத்மாடவீ' பிராகாரம் அமைந்திருக்கும் இப்பிரகாரங்களில் கதம்பம், கற்பகம், ஹரிசந்தனம், பாரிஜாதம், மந்தாரம் என்னும் பூச்சொரியும் மரங்கள் வளர்ந்திருக்கும் அழகிய நந்தவனங்கள் காட்சி தருகின்றன. பரிவார தேவதைகள் சூழ்ந்துள்ள இப்பிரகாரங்களின் மத்தியில் அமைந்திருப்பது சிந்தாமணிக்ருஹம். இக்கிருகத்தினுள் சிதக்னிகுண்டம், தேவியின் பூஜாபாத்ரங்கள் விளங்குகின்றன. இவற்றுக்கெல்லாம் நடுவே அதிசிறந்த ஸ்ரீநகரம் விளங்கக் காணலாம். இங்கு அமைக்கப்படும் ஸ்ரீசக்ரம் த்ரைலோக்ய மோஹனச் சக்ரம் மூன்று பிரகாரங்களுடன் கூடிய நாற்சதுரமாக பூபுரத்தியம் என முதலாவது தளமாகவும் சர்வசாபரி பூரகச்சக்ரம் பதினாறு தளங்களையுடைய இரண்டாவது தளமாகவும் சர்வசம்ஹோபனச்சக்ரம் எட்டிதழ் கொண்ட மூன்றாவது தளமாகவும் சர்வசௌபாக்ய தாயகச்சக்ரம் பதினான்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கோணங்களைக் கொண்ட நான்காவது தளமாகவும், சர்வாவ்த்த சாதகச் சக்ரம் எனப் பத்து முக்கோணங்களையுடைய ஐந்தாவது தளமாகவும் சர்வரக்ஷாகரச் சக்ரம் எனப் பத்து முக்கோணங்களைக் கொண்ட ஆறாவது தளமாகவும், சர்வரோகஹரச்சக்கரம் என எட்டுக் கோணங்களைக் கொண்ட ஏழாவது தளமாகவும், சர்வானந்தமயச்சக்ரம் என முக்கோணங்களைக் கொண்ட எட்டாவது தளமாகவும் சர்வானந்தமயச்சக்ரம் என வழங்கும் முக்கோணம் ஒன்பதாவது தளமாகவும் அமைந்துள்ள முக்கோணத்தின் மத்தியில் உள்ள பிந்து வடிவமே தேவியின் வாசஸ்தலமாகும். மேலும் சர்வானந்தமயச்சக்ரத்தின் மேல் பிரம்மா-விஷ்ணு-ருத்திரன்-மகேஸ்வரன் என்னும் (கால்களைக் கொண்ட) சிவதத்துவம் முதல் பிரகிருதித்தத்துவம் வரையான முப்பத்தாறு தத்வங்களுடன் விளங்கும் மனோகரமான காமேஸ்வரனின் (மடியில்) மகாமஞ்சத்தில் வீற்றிருந்து தேவி அருள்பாலிக்கின்றாள்.

இவ்விதம் அருள்பாலிக்கும் அம்பிகையை மந்திர தந்திர யந்திர வடிவமாகவே ஸ்ரீ சக்ரத்தில் பூஜிக்கப்படுகின்றது. நினைப்பவா்களைக் காப்பாற்றும் தன்மை கொண்ட மந்திரங்களை ஒழுங்குற உச்சரிப்பதால் மந்திரமும், மந்திரக்கருத்தை உருவகப்படுத்திக் காட்டுவதால் யந்திரமும், யந்திரத்தில் மனதை நிலைநிறுத்தி வெளி உபசார-மானசீக-நியாச-யோக-முத்திரா-சாதனங்களான தந்திரமும் பூஜை வடிவங்களாகின்றன. தேவியின் விசேட பூஜா பீடங்களாக ஐம்பத்தொரு அக்ஷரங்கள் சிறப்பிக்கப்படுகின்றன. காமரூபம், வாரனாசி, நேபாளம், உஜ்ஜயினீ, பிரயாசை, காமகோடி முதலிய ஐம்பத்தொரு பீடங்களின் ஆவரண தேவதைகளாகின்றன. இதையே லலிதா சகஸ்ரநாமத்தில் 'பஞ்சாசத்பீடரூபிண்யை' என அழகாக வா்ணிக்கப்படுகின்றாள். ஸ்ரீசக்ரத்தில் தேவியை வழிபடுவது பற்றி ஆதிசங்கராச்சாா்யா் ஸௌந்தா்யலகரியிலும், தமிழில் திருமூலா் திருமந்திரத்திலும் அபிராமி அந்தாதிபோன்ற நூல்களிலும் சக்தி வழிபாடு சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

இவ்வாறு அருள் வழங்கும் அன்னை பராசக்தியை ஸ்ரீசக்ரத்தில் (அம்பாள் ஆலயங்களில்) அட்டமி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணமி தினங்களிலும், திங்கள், வெள்ளி, வாரங்களிலும், பங்குனித்திங்கள், ஆடிப்பூரம் முதலிய அம்பாளின் தினங்களிலும் சிறப்பாக நவராத்திரி காலங்களிலும் விசேடமாக ஐப்பசிமாத பூரணைத் தினத்திலும் பூஜிப்பது சிறந்த பலனைத் தருவதாகும். தாந்திரீக வழிபாட்டு நெறியில் அம்பிகையை ஸ்ரீசக்ரத்தின் நடுவில் (பிந்துவில்) ஆவாகித்து பரிவார தேவதைகளை தனித்தனி ஆவரணங்களாக மற்றைய கோணங்களில் அம்பிகையை நோக்கியவாறு அமா்ந்திருப்பதாகப் பாவனை செய்வதே ஸ்ரீசக்ர பூஜையாகும். பூஜையின் போது சிவாசாரியா் பூதசுத்தி சிவோகம்பாவனை முதலியவற்றால் ஆத்மதேக சுத்திகளைச் செய்துகொண்டு தேவா்களை அழைத்து அரக்கா்களை வெளியேற்றுவதற்காக கண்டாபூஜையும் மங்கலத்தின் பொருட்டு தீபபூஜையும் ஆவாஹனம் பாத்தியம் முதலியவற்றிற்காக பாத்தியம் அா்க்கியம் ஆசமனம் என்னும் பாத்திர பூஜைகளையும் கலசபூஜை சங்கபூஜை முதலியவற்றையும் செய்து யந்திரத்தில் பீடபூஜை செய்து குறிப்பிடும் இடத்தில் தேவியை பரிவாரதேவதைகளுடன் ஆவாகனம் செய்யவேண்டும். ஆவாகித்த இறைவிக்க தியானம் பிராணப் பிரதிஷ்டை செய்து பதினாறு அல்லது அறுபத்திநான்கு உபசாரங்களைச் சமா்ப்பித்து மதுபா்க்கம் அா்ச்சனை முதலியவற்றை தா்ப்பணம், பூஜையாகச் செய்து விசேட அலங்கார தீபாராதனை செய்து வேத, ஸ்தோத்திர, திராவிட பாராயணங்களால் தேவியை ஆனந்தப்படுத்துவதே இப்பூஜையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டு முறையாகும். அர்ச்சனையின் போது அம்பாளை சஹஸ்ர திரிசதி (முன்னூறு) நாமங்களால் புஷ்பங்கள், குங்குமம், அக்ஷதை, மாதுளம்முத்து போன்ற அர்ச்சனைத் திரவியங்களாலும் வழிபடுவது சிறந்த பலனைக் கொடுப்பதாகவும் தேவியின் நூல்கள் குறிப்பிடுகின்றன.

ஆலயங்களில் அம்பிகையை ஸ்ரீசக்கரத்தில் வழிபடுவதால் வழிபடும் உபாசகர், உபாசனைக்கு உதவும் சாதகர் சாதனைகளைச் சிறப்பிக்கும் பக்தகோடிகள் யாபேரும் இறைவியின் கருணாகடாக்ஷத்தால் ஆயுள், ஆராக்கியம், ஐஸ்வரியம் மங்கலம் யாவும் கிடைப்பதாக முன்னோர்களின் மரபுகளைப் பின்பற்றும் இந்துக்களின் நம்பிக்கை மேன்மேலும் வளர்ந்து வருகின்றது.

## சரஸ்வதி புராணம்

தாவறு முலகெலாம் தந்த நான்முகத்
தேவுதன் துணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதோ றிருந்திடும் நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசை புனைந்து போற்றுவாம்.

**நன்றி: நவராத்திரி மலர்,**
**சாவகச்சேரி கல்வயல் இந்துஇளைஞர் மன்றம்**

❋ ❋ ❋

## கோமாதா சிவகுலமாதா

ஓமாம் அட்சரத் தோங்கிய வேதம்
பூமா ரிகொடு போற்றிடும் தெய்வம்
ஓமாக் கினிபுகழ் உயர்த்திடும் தெய்வம்
கோமா தாவைக் கும்பிட்டு வாழ்வோம்.

## பசுவின் புலம்பல்

சைவரென்று பேசிடுவார் என்னாசை மகனே இங்கே
சமயநெறி தவறிவிட்டார் என்னாசை மகனே
கையணைத்துப் பாலெடுத்தார் என்னாசை மகனே எம்மைக்
கடவுளென்று பொங்கலிட்டார் என்னாசை மகனே.

ஆண்டுக்கொரு கன்றாகப்பெற்றெடுத்தேன் நித்தம்
அன்பாக மடி சுரந்து பால் கொடுத்தேனே
வேண்டுமட்டும் எங்கள் பட்டிபெருகச் செய்தேனே வயல்
விளைபயிர்கள் செழுமைபெற எருவும் தந்தேனே.

வேளாளர் கலப்பையிலே உனதுதந்தையார்
வியர்வை சிந்த உழுதுழுது விளைவுகொடுத்தார்
பாழான நிலமெல்லாம் பயிர்நில மாக்கிப்
பாடுபட்டுப் பணம் பெருகும் பயனுண் டாக்கினார்.

காய்ச்ச லென்றால் காலலுத்தால் ஆறுதலில்லை
கழுத்திடையே புண்ணிருந்தால் ஆறுதலில்லை
நோய்ச்சுமையைக் காட்டாமல் மேற்சுமைகொண்டு
நுகமிழுத்தே உமலிளைத்தார் உன்தகப்பனார்.

**நன்றி: பசுவின் புலம்பல்**
**அருட்கவி. சீ. விநாசித்தம்பிப்புலவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைவேற் சுவாமிகள்

**இ. சிவலிங்கம் அவர்கள்**
சமாதி கோயிலடி,
குப்பிளான் ஏழாலை.

யாழ்ப்பாண குருபரம்பரையின் முதல்வராகிய கடையிற்சுவாமிகளின் ஞானவாரீசாகவும் சீடர் திலகமாகவும் சிவபுண்ணியப் பேறுடைய பக்குவசீலர்கள் பலரை ஆட்கொண்டு பெரும் குருமூர்த்தியாகத் திகழ்ந்தவர் குழந்தைவேற் சுவாமிகளாவர். குழந்தைவேற்சுவாமிகளின் ஜனனபூமி வேலணை இதற்கு நிகரான வேறோர்பதி வண்ணார்பண்ணை சுவாமிகளின் தவத்தந்தையாரும் தாயாரும் முறையே இவ்விரு பகுதியையும் சார்ந்தவர்கள் தந்தையார் சண்முகநாதன் தாயார் தெய்வானைப்பிள்ளை என்றும் பெயர் பெற்றவர்கள். சாதாரணமாக குழந்தைவேலு என்றே பெற்றோர் அழைத்து வந்தனர். சிறுவனாக இருந்த காலத்தில் எல்லாருடைய பாராட்டும் சீராட்டும் பெற்றவராய் குழந்தைவேலு வளர்ந்து வருவாயினர் கண்டோரைக் கவரக்கூடியதாய் திருவுருவப் பொலிவுடனும் கேட்பார் வியக்கக் கூடியதான விவேகத்திறனும் அவர்பால் விளக்கமுற்றிருந்தன. வாழும்பிள்ளையை மண்விளையாட்டில் தெரியும் என்பது பழமொழி. பெற்றோர் இவருக்கு உரிய காலத்தில் வித்தியாரம்பம் செய்து வைத்திருந்தனர் அவர் எண்ணும் எழுத்தும் விரைவிற் கற்று இலக்கண இலக்கியம் ஆங்கிலம் அனைத்திலும் முதன்மையாகத் தேறி வந்தார். எந்தப்பாடமும் அவர் வருந்திக் கற்கவேண்டிய சரக்காக இருக்கவில்லை. அக்காலத்தில் இலங்கையில் ஆங்கில ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆங்கிலத் தேர்ச்சியும் இயற்கை விவேகமும் உயர் குலப்பண்பும் உடையர்களை அரசாங்கசேவையில் மதிப்புக்குரிய வேலைகள் காத்திருந்தன். டச்சுக்காரர் ஆட்சியில் அரசாங்க சேவையில் ஈடுபட்டிருந்தோரின் சந்ததியினர் உயர்ந்த பதவிகளுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். டச்சுக்காரர் ஆட்சியில் தீவேழு பகுதிக் கோவிற்பற்றுக்கும் ஏகமுதலியாராகத் திகழ்ந்தவர் வேலணையூர் இராசசேகர முதலியார் என்பவர். இவருடைய சந்ததியில் நாலாம் தலைமுறையாகத் திகழ்ந்தவர் குழந்தைவேலர். அந்த முறையில் உத்தியோகம் ஒன்று வாய்த்தது. அதுவும் முதலியார் உத்தியோகம்தான்.

உத்தியோகப் பொறுப்பேற்று இலங்கையின் பல பாகங்களிலும் முதலியாராகி கடமையாற்றி வந்தார். ஓடும் புளியம்பழம் போலவும் தாமரையிலையில் தண்ணீர் போலவும் உத்தியோகத்தோடு ஒட்டாமல் உத்தியோகம் பார்த்து வந்தார் குழந்தைவேலர். அவரது தன்மானப் போக்கைக் கண்ட அக்கால மேலதிகாரிகளான ஆங்கிலேயர் பல தடவை இவருடன் முட்டிமோதியதுண்டு. உத்தியோகம் பார்த்த காலத்தில் தன் முயற்சியால் அனுராதபுரத்தில் வேல் ஒன்று ஸ்தாபித்து பூசை செய்து வந்தார். குழந்தைவேலரின் உள் ஒளியால் ஆவாகிக்கப்பட்ட சிறுவேல் இன்றும் கதிரேசன் கோவிலாக கட்டிட வனப்போடு திகழ்கின்றதாக அறியக் கிடக்கின்றது.

ஒரு நாள் கோட்டில் வழக்கப்படி நிகழ்வுகள் நடந்து கொண்டிருந்தது. அன்று நீதவானாக இருந்த வெள்ளையர்களுக்கும் இவருக்கும் வாக்குவாதம் நிகழ்ந்தது. வெள்ளையரான நீதவான் பொதுவாக யாழ்ப்பாணத்தவர்களைச் சுட்டி இழிவாகப் பேசினார் இதனால் குழந்தைவேலர் உடனடியாக வேலணை வந்துசேர்ந்தார். வேலணை வந்து சேர்ந்த குழந்தைவேலர் மனைவி வள்ளியம்மையுடன் இருந்து வருவாராயினர் அந்நாளில் இவரது உறவினர்கள் ஊர்காவற்றுறையில் வேலை பார்த்து வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைவேலரையும் வலிந்து இழுத்தனர். இவர்களைத் திருத்திப்படுத்தும் நோக்கில் சுங்கலாக்காவில் வேலை பார்த்து வந்தார். அவரது மனம் உத்தியோகத்தில் இருந்தாலும் உள்ளமெல்லாம் வேறெங்கோ சஞ்சரிப்பதாக இருந்தது.

அக்காலத்தில் ஞானகுருவாக சஞ்சரித்த கடையிற்சுவாமிகள் சுங்கலாக்கா கந்தோரிலும் நின்று கொண்டிருந்தார். பேனையும் கையுமாக இருந்த குழந்தைவேலர் சுவாமிகள் முன்னிலையில் அசைவற்று சும்மா நின்று கொண்டிருந்தார். கடையிற் சுவாமிகள் திரும்பி நடந்தார். குழந்தைவேலர் பின்னே தொடருகின்றார் கடையிற் சுவாமிகளின் ஞானதீட்சை பெற்று கடையிற் சுவாமிகளுக்குக் குருபாத சேவை செய்து கொண்டிருக்கும் நாளில் அநுராதபுரத்திலிருந்து கோட்டுக்கட்டளை ஒன்று வந்து சேர்ந்தது. கட்டளை வந்திருப்பதுபற்றி குழந்தைவேலர் யாருக்கும் ஒன்றும் பேசவில்லை. வழக்கம்போல குருநாதனுக்கு தொண்டுகள் செய்தபின் குழந்தைவேலர் அவர்முன் அமர்ந்திருந்தார். என்னடா குழந்தைவேலா என்ன வியாச்சியம் என்ற வினா குருநாதரிடம் இருந்து தோன்றியது. குழந்தைவேலர் நடுநடுங்கி வழக்கு விசயத்தை கூறுகிறார். கேட்ட சுவாமிகள் வெடிபடச்சிரித்து 'போகத்தானே வேண்டும்' நீ அநுராதபுரம் போ நான் அங்கு வருவேன் என்றார்.

அநுராதபுரக் கோட்டில் வழக்கு விசாரிக்கப்பட்டது. வழக்காளி பக்க விசாரணை முடிவுற்றதும் நீதவான் எதிரியைப் பார்த்து உமது கட்சியை விவாதிக்க வழக்கறிஞர் யாருமுண்டோ என வினாவினார் அவர் இல்லை என்று பதிலளித்தார். வழக்காளிகளின் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யும் முறையில் நீர் ஏதேனும் கேள்வி கேட்க விரும்புகிறாயா? என்று நீதவான் அடுத்த படியாக வினவினார். குழந்தைவேற்சுவாமிகள் மேலே பார்த்தார். கோட்டு கட்டிடக் கூரையில் மயிலொன்று உலாவியது. கோட்டில் ஒரு வகையான பரபரப்பு குழந்தைவேலர் கேட்ட கேள்விகளுக்கு வழக்காளி பக்கத்தினர் திணறினர் வழக்காளிக்கு தலை சுழன்றது. வழக்கறிஞர் மேலே பார்த்தார். அந்த மயில் அங்கே தான் உலாவிக்கொண்டிருந்தது. குறுக்கு விசாரணை முடிவில் குழந்தைவேலர் தான் நிரபராதி என்று கூறி அமைதியாக இருந்தார் நீதிபதி வழக்குச் சம்பந்தமான தீர்ப்பை வழங்கினார் வழக்கில் எதிரியாகக் காணப்பட்ட குழந்தைவேலர் நிரபராதியாகக் காணப்பட்டு விடுதலை செய்யப்பட்டார் என்று கூறினார். குழந்தைவேலர் சிங்கம்போல வெளியேறி வெளியே வந்தார்.

✳ ✳ ✳

## அருள் ஒளியே வாழி

**அருள் ஒளி ஆத்மீகச் சஞ்சிகை**
**இறை பக்தி வளர்க்கும் ஈடில்லாப் பணியில்**
**உயர்வழி காட்டி ஊக்கமது தந்து**
**எல்லோருக்கும் ஏற்றவை சொல்லி**
**ஐயமகன்றிட ஒப்புயர்வு இன்றி**
**ஓங்கிய நன்னெறி ஔவையின் வழியில்**
**அனைவர்க்கும் தந்து ஆண்டாண்டு வாழ**
**அன்புடன் வாழ்த்துகின்றோம்! வாழிய! வாழியவே**

**தி. மயூரகிரி சர்மா**
நீர்வேலி, அ. இ. கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரீர் நல்லாபுரி நாவலன் புகழ் பாடுவோம்

கவிஞர் முருகவே.பரமநாதன்
கனடா

என்னரிய சைவநெறிப் பெருங்குடியீர்
எழுந்திடுங்கள் எங்கள் நாவலரைப்
பன்னரிய பாடல்களாற் போற்றிடுவோம்
பாடுகின்ற பாவலரே வந்திடுங்கள்
துன்னரிய பாவினங்கள் பலநவின்றே
தூயதமிழ்க் காவியங்கள் வடித்திடுவோம்
பன்னரிய மன்னவராம் தமிழாகரன்
மாற்றுயர்ந்த நாவலனின் நலன்களெங்கும்

நாவினிக்க நம்மனமினிக்கப் பாவியுங்கள்
நாடெல்லாம் நாளெல்லாம் நவின்றிடுவோம்
பாவினிக்க பண்ணினிக்கப் பாடிடுவோம்
பாரெல்லாம் மவன்புகழைப் பரப்பிடுவோம்
பூவினிக்க புனலினிக்க பூமிதானினிக்க
புரவலனாய் வந்துதித்த புத்தொளியை
ஆவினிக்க அதன்கன்று தான் இனிக்க
ஆறுமுகநாவலனை ஆதவனைப் பாடிடுவோம்

பாட்டிசைப்போம் நற்பண் தானமைப்போம்
பாங்கான நாவலனைப் பகர்கின்ற
பாட்டிசையிற் பாலகனும் அயர்ந்திடுவான்
பாவோசை கேட்டவொரு பாம்புமன்றோ
நாட்டமுடன் படமெடுத்து ஆடிநிற்கும்
நடனமிடும் மயில்தோகை விரித்தாடும்
கேட்டவரும் கண்டவரும் மனங்கிளர்ந்தே
தெம்பியெழுந்தவன் புகழை வியப்பரன்றோ

தென்தமிழும் வடமொழியும் தேர்ந்துளானை
தேசமெங்கும் பேசுகின்ற ஆங்கிலத்தை
தன்மொழிபோற் தாலமதில் கற்றுளானை
தாய்மொழியும் தன்மதமும் போற்றுவானை
இன்றமிழில் இலக்கண இலக்கியங்கள்
எல்லாமே இயற்றினானை இவ்வுலகில்
தன்மொழியை தகைசான்ற சைவமதை
தனதிரு கண்மணியாய்ப் போற்றினானைப் போற்றுதுமே

இங்கிதங்கள் பலதெரிந்த இன்தமிழன்
இங்கிலீசின் இதமறிந்து எழுதுவானை
சங்கநிதி பதுமநிதி எனத்தமிழைச்
சபைகளிலே எழுந்திருந்து முழங்கினானை
பங்கமிலாச் சைவநெறி எழுச்சிகொளப்
பாங்கான சேவைபல இயற்றினானை
சங்கைபல தன்பெயரோ டிணைந்துளானை
சாதனைகள் பலபுரிந்த தமிழானைப் போற்றுதுமே

கொண்டலெனத் தமிழ்மொழியும் கொள்ளையர் னே
கொள்கைவழி தன்வழியாய்க் கொண்டுளானே
வண்டமருந் துளவோனின் மனமெல்லாம்
வண்டமிழின் பின்னேசென்ற வாறேபோலத்
தண்டரள அருவிபோன்றே தமிழ்மாரி
தனைப்பெய்தே தரணியெலாம் தமிழ்கொழிக்க
விண்டபல நூல்வரிசை விளம்பப் போமோ
வித்தகனாம் நாவலநின் விரைமலர்தாள் தஞ்சமாமே

நாவலநிற் புகழ்வாழி ஞாலம்வாழி
நாவலநின் நெறிவாழ்க நீதிவாழி
நாவலநிற் கலைவாழி கண்ணியம்வாழி
நாவலநிற் கடமைவாழி கட்டளைகள்வாழி
நாவலநிற் புதுமைவாழி புலமைவாழி
நாவலநின் நாவாழி நாற்கவியும்வாழி
நாவலநிற் சைவம்வாழி சதுரும்வாழி
நாவலநின் தொண்டும்வாழி வாழியவே!

கன்னலொடு கற்கண்டு கலந்தாலென்ன
கனகமிகு தமிழ்வளர்த்த காவலனே
சென்னலொடு சேர்ந்தவொரு தவிடுபோலச்
சேமமுற நீவடித்த நூல்களெலாம்
நென்னலொடு இன்றுமுதல் நாளையெலாம்
நேர்நின்று நம்மினத்தைக் காக்கவேண்டும்
கன்னலொடு கலந்தவொரு தேனைப்போன்றே
கவிதந்த காவலனே நின்கீர்த்தி வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுமத வேள்விகளை உடைத்தெறிந்து
வேணமட்டும் அயராது உழைத்தவனே!
நாற்றமென நம்மதத்தைக் கேலிசெய்ம்பிற
நாட்டவரை உணரவைத்த நாயகனே!
ஊற்றமென ஊறுகின்ற ஊற்றுக்கண்ணே!
உத்தமனே! உறுதுணையே! உதயமேநீவாழ்க
தேற்றமெலா மெமக்களித்த தென்னவனே!
தேன்தமிழை நாடெல்லாம் சிவணியசெல்வமே!

ஏற்றமெலா மெமக்களித்த இறைசுதனே
எங்கெல்லாம் நீசேவை நிகழ்த்தினையோ
காற்றுமறைக் கண்டுனது பாதம்போற்றும்
கற்றவரும் காவலரும் நினைக்கண்டே
போற்றியதை நின்வாழ்வு நெறியேகாட்டும்
பொற்புடைய நற்றவமே போற்றுகிறோம்
வேற்பெருமான் திருவருளால் வெற்றிகண்ட
வித்தகனே வேளாறுமுகனே நின்னாமம்வாழ்க!

வேண்டிய அத்தனையும் நாமியற்றவேண்டி
வெள்ளெருக்கஞ் சடையானை வேண்டுகிறோம்
ஆண்டியவன்அறுமுகவன் அருளுண்டு
இனுதினமும் துணையாவான் அந்தணனாம்
பாண்டியனும் பல்லவரும் சோழர்களும்
பாங்குடனே வளர்த்ததமிழ் வாழவைத்த
காண்டிபனே! கவலையெலாம் கடந்தவனே
கந்தமுருகோனே காப்பாயெமையென் நாளுமே

பண்டிதர்கள் பல ஆற்றுப் படைகள் பாடி
பாதமிசை சூட்டுகின்ற பார்புகழும்
எண்டிசையும் விண்ணும் மண்ணும்
ஏற்றுகின்ற ஏந்தலே எங்கள்திலக!
பண்டிதரும் பாமரரும் பரவுகின்ற
பண்புடைய ஆறுமுக நாவலனே!
மண்டிநிதம் நின்பெருமை பேசுகின்றார்
மண்திணி ஞாலமிசை நின்மகிமைநவிலம்போமோ?

# அருள் விருந்து

அன்பில் நிலைத்திருப்பவன் அச்சத்தை அறியான். நல்வாழ்வு வாழ விரும்புகிறவன் தனது நாவை அடக்கிப் பழகட்டும் ஒருவனுடைய எண்ணம் எப்படியோ வாழ்வும் அப்படியே ஆகிறது.

ஆழ் ஆழிபோன்று மனிதனுடைய மனது யாண்டும் ஆழ்ந்தும் விரிந்தும் இருப்பதாகுக.

பலவிஷயங்களை அறிந்திருப்பவன் அறிவாளியல்ல. பயன்படுவதை அறிந்திருப்பவனே அறிவாளி.

மக்கள் படைத்துள்ள தளராத நெஞ்சமே ஒரு நாட்டுக்கு நெருக்கடி நேர்ந்த காலை நல்ல அரண் ஆகிறது.

வசை மொழியையும் குறை கூறுவதையும் அமைதியாக ஏற்றுக்கொள்வது மனபரிபாகத்துக்கு அறிகுறியாகும்.

பூத்த மரத்தின் நறுமணம் நாலாபக்கமும் பரவுகிறது. மனிதனுடைய கீர்த்தியும் தானாகவே நாலாபக்கமும் பரவுகிறது.

நலம் புரிவதை முன்னிட்டு ஒருவனுக்கு இன்னல்களும் இடுக்கண்களும் நேரிடுமாயின் அவைகளைக் குறித்து அவன் வருந்தலாகாத.


நல்ல நாளா அல்லது மப்பு மந்தாரமுடைய நாளா என்பதைச் சூரியோதயம் விளக்குகிறது. மனிதனுடைய வாழ்க்கைத் தரத்தைப் பிள்ளைப்பருவம் விளக்குகிறது.

உலக விஷயங்களுக்குக் காது கொடாது செவிடன் போன்று ஆய்விடு. அப்பொழுது பகவத் பெருமை உன் உள்ளத்தினுள் ஒலித்துக்கொண்டிருப்பதைக் கேட்க வல்லவனாவாய்.

மனதை நடுநிலையில் வைத்திருப்பவன் உண்ணும் பொழுதும், உறங்கும் பொழுதும் நடக்கும் பொழுதும், இருக்கும் பொழுதும், வினையாற்றும் பொழுதும், எப்பொழுதும் சாந்தியில் நிலைபெற்றிருக்கிறான்.

[தர்மசக்கரம்; சக்கரம்:8;விளம்பி (மீ),பங்குனிமீ; ஆரம்-3;பக்கம்:82;1959;ஆசிரியர்:சுவாமிசித்பவானந்தர்; ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம் (ராமகிருஷ்ணமிஷன்); திருப்பராய்த்துறை போஸ்ட்; திருச்சி ஜில்லா]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்தபுராண சிறுவர் அமுதம்

- மாதாஜீ

## 69. நாரதர் தூது

வேடுவர் செய்த மாதவத்தினால், வள்ளியென்னும் சிறுகுழந்தை வேடுவர் குடிசையில் தவழ்ந்தும், தளிர்நடை, குறுநடை நடந்தும் வளர்ந்து வந்தது. அக்காலத்தில் அக்குழந்தை வீட்டு முற்றத்தில் உள்ள வேங்கை மரச்சோலையின் கீழ் உலாவிவரும் சிற்றில் இழைத்துச் சிறு சோறு காய்ச்சி விளையாடும் (மண்ணில்) வண்டலாட்டம் ஆடும். அம்மானை ஆடியும் பெற்றோரை அக்குழந்தை மகிழ்வித்து வந்தது.

வள்ளியம்மைக்குப் பன்னிரண்டு வயது வந்தது. குலவழக்கப்படி வள்ளியைத் தினைப்புனம் காவல் வைக்க நினைத்தார்கள். இதனால் உயர்ந்த பரணைக் கட்டினார்கள். அப்பரண் மீது வள்ளிநாயகியைக் காவல் வைத்தார்கள்.

வைராக்கியம் என்னும் பரண்மேல் ஏறிநின்று இறைவன் திருநாமங்களாகிய கவண் கற்களை எறிந்து மும்மலங்களாகிய பறவைகள் கொத்தாதபடி சிவகதி ஆகிய கதிருடன் கூடிய ஞானப்பயிரைக் காத்து வந்தாள் வள்ளிப்பிராட்டி. இக்காட்சியைக் கச்சியப்ப சுவாமிகள்

"காட்டில் எளிதுற்ற கடவுள்மணியை கைக்கொள்ளற்கு
கூட்டில் இருள்ஓட்டக்குறுகுய்த்த வாறன்றோ
கீட்டுசுடர் வேற்குமரன் தேவியாம் தெள்ளமுதைப்
பூட்டுசிலைக் கையார் புனம்காப்ப வைத்ததுவே" என நயம்பெறப் பாடுகின்றார்.

தினைப்புனத்தில் எப்பக்கமும் பார்க்கும்படி பரண்மீது நின்ற வள்ளியம்மையார் தட்டை, காடை, கவுதாரி முதலிய பறவை இனங்களை ஓட்டினார். மான், முட்பன்றி முதலிய மிருகங்களைக் கவண் வீசி விரட்டினார் இதனைக் கச்சியப்ப சுவாமிகள்

"பூவைகாள் செங்கட் புறவங்காள் ஆலோலம்
தூவிமா மஞ்ஞைகாள், சொற்கிளிகாள் ஆலோலம்
கூவல் சேர்வுற்ற குயிலினங்காள் ஆலோலம்
சேவல்காள் ஆலோலம் என்றாள் திருந்திழையாள்" என அருளியுள்ளார்.

ஒரு நாள் நாரதர் வள்ளியம்மை தினைப்புனம் காத்து நின்ற தினைப்புனத்திற்கு வந்தார். வள்ளிப்பிராட்டியின் பேரழகைக் கண்டார். அவரைக் கைகூப்பி வணங்கினார். இப்பிராட்டி பூர்வீகத்தில் திருமாலின் திருமகள் முருகப்பெருமானைத் திருமணம் செய்ய விரும்பிச் சரவணப்பொய்கை அருகில் அருந்தவம் செய்தவர். விரைவில் முருகப்பெருமானுக்கும் வள்ளிநாச்சியாருக்கும் திருமணம் ஆகவேண்டுமென நாரதர் தன் மனதுள் நினைந்தார். வள்ளியம்மையை வணங்கி விடைபெற்றார். முருகப்பெருமானிடம் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமானின் திருவடிகளைப் பலமுறை வீழ்ந்து வணங்கினார் நாரதர். எம்பெருமானே! முன்னைப் பிறவியில் திருமாலுடைய திருமகளாகிய சுந்தரவல்லி அம்மையார் சரவணப்பொய்கையிலிருந்து பெருந்தவம் புரிந்தவர். அப்போது தேவரீர் தோன்றி வள்ளிமலையில் மான்வயிற்றில் அவதாரம் செய்யும்படி அருள்செய்தீர்கள். அவ்வாறு சுந்தரவல்லி மான் வயிற்றில் அவதரித்து வேடர்குல மன்னவனால் வள்ளி என்னும் நாமம் பூண்டு தினைப்புனத்தில் காவல் செய்து கொண்டிருக்கின்றார். பேரழகு வாய்ந்தவர் அந்த அம்மையார் உலகம் உய்யும் பொருட்டுத் தாங்கள் திருமணம் புரிதல் வேண்டுமென விண்ணப்பம் செய்தார்.

தூது வந்த நாரதர் கூறியதைக் கேட்ட ஆறுமுகப்பெருமான் மகிழ்ச்சியடைந்து "நன்று நமக்கும் திருவுள்ளம் தான்" என்று அருளினார்.

வள்ளிப்பிராட்டியாருக்குத் திருவருள் புரிய நினைந்தார். அதனால் மானிட வடிவம் பூண்டார். காலில் வீரக்கழல் அணிந்தார். வில்லும் அம்பும் ஏந்தினார் வேட்டுவக் கோலத்துடன் தணிகைமலை நீங்கி வள்ளிமலை வந்தார். வள்ளிநாச்சியார் இருக்கும் தினைப்புனம் வந்தார் முருகப்பெருமான்.

முருகப்பெருமான் பரமான்மா, ஜீவான்மாவான வள்ளியம்மையை நோக்கினார். பேசத் தொடங்கினார் 'வாள்போன்ற கண்களையுடைய பெண்ணே' உலகிலுள்ள மாதர்கட்கெல்லாம் இறைவியாகிய உன்னை உன்னதமான இடத்தில் வைக்காமல் வேட்டுவர்கள் வாழும் காட்டில் தினைப்புனத்தைக் காக்க வைத்தனரோ! அவர்களுக்குப் பிரமன் அறிவைப் படைக்க மறந்து விட்டானோ. வள்ளி பதிலேதும் கூறவில்லை முருகனுடைய செயல்களைக் கண்காணித்து வந்தாள். மீண்டும் பேசத் தொடங்கினார்.

பெண்ணமுதே! உன் பெயரென்ன? உன் ஊர் யாது? நின் ஊருக்குப் போகும் வழி எது? வள்ளி பதிலேதும் கூறவில்லை. முருகப்பெருமானிடம் இன்முகம் காட்டவில்லை. வேறு திசையில் பார்த்துக் கொண்டிருந்தாள். நீ என்னுடன் பேசாவிட்டால் தற்கொலை செய்வேனென்று பயமுறுத்தினார் முருகப்பெருமான்.

## 70. வேங்கையாய் விருத்தனான முருகப்பெருமான்

வள்ளியின் மனத்தை முருகப்பெருமான் வேட இளைஞனாக இருந்து துருவித் துருவி ஆராய்ந்தார். வள்ளி தன் இருதயக் கமலத்தில் தன்னையே (முருகப்பெருமானையே) மட்டும் நினைந்திருக்கின்றாரென்பதை உலகுக்குக் காட்ட பற்பல வேடம் கொண்டார்.

முருகப்பெருமான் அன்பினால் "மெழுகுபோல" உருகி அன்பு இன்ப மொழிகள் பேசிக்கொண்டிருந்தார். அப்போது வேட்டுவராசனான நம்பி பரிசன வேடுவர் சூழ, வள்ளிக்குத் தேன் தினைமாவுடன் வந்தான். இதனைக் கண்ட முருகப்பெருமான் வேங்கை மரமாக மாறினார். அந்த வேங்கைமரத்தின் அடிமரம் வேதங்களாகவும், நடு சிவாகமங்களாகவும், கிளைகள் யாவும் பல கலைகள் திருமுறைகளாகவும் காணப்பட்டன. இதனைக் கச்சியப்ப சுவாமிகள்

**"ஆங்கது காலை தன்னில் அடிமுதன் மறைகளாக**
**ஓங்கிய நடுவணெல்லா முயர்சிவ நூலதாகப்**
**பாங்கமர் காடுமுற்றும் பல்கலையாகத் தானோர்**
**வேய்கையி னுருவ மாகி வேற்படை வீரனின்றான்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பக்தி சொட்டச் சொட்டப் பாடுகின்றார். நம்பிராசன் தான் கொண்டு வந்த தேன் தினைமாமுதலியவற்றை மகள் வள்ளியிடம் அளித்தபின் "இந்த வேங்கைமரம் புதிதாக நிற்கின்றதே? எப்படி வந்ததென" மகளைக் கேட்டான். "அப்பா இதன் வரலாறு எனக்குத் தெரியாது" என்று வள்ளி கூறினாள். மற்ற வேடர்கள் வேங்கை மரத்தை வெட்ட ஆயத்தமானார்கள். நம்பிராசன் தடுத்தான். அது நிற்கட்டும் வள்ளியை நோக்கி "அம்மா அஞ்சாதே! இம்மரம் உனக்கு நல்ல குளிர்ந்த நிழல் தருமல்லவா" என்று கூறிவிட்டுப் பரிசனங்களுடன் திரும்பிச் சென்றான்.

மீண்டும் வேங்கை மரமாக நின்ற முருகப்பெருமான் இளைஞனாக உருவம் கொண்டான். தனது மனக்கருத்தை வள்ளிப்பிராட்டிக்கு கூறினார். வள்ளிநாயகி நாணம் கொண்டார். "ஐயா! நீங்கள் உலகம் புகழும் உயர்குலச் செம்மல்" நான் தினைப்புனம் காக்கும் இழிகுலமாகிய வேட்டுவச் சாதிப்பெண். தாங்கள் கேவலம் குறத்தியை விரும்புவது தகாது. "புலி பசித்தால் புல்லைத் தின்னுமா?" என்று கூறினாள். சுவாமியை சுவாமி என்று அறிந்தும் அறியாதவள் போல இவ்வாறு கூறினாள். அப்போது நம்பிராசன் சேனைகளுடன் வாத்திய ஒலியுடன் அங்கு மீண்டும் வந்தான். வள்ளி மிகவும் பயந்தாள். வேட இளைஞனுக்கு என்னாகுமோ என அச்சம் கொண்டாள்.

குமரன் இப்போது விருத்தராக அதாவது வயது முதிர்ந்த கிழவனாக மாறினார். பரிசனங்களுடன் வந்த நம்பிராசனை அத்தவக் கிழவனார், "உனக்கு மங்களம் உண்டாகுவென வாழ்த்தினார். உன்குலம் தழைத்தோங்குக, சிறந்த வளம்பெருகட்டுமென" வாழ்த்தினார். அவர்களுக்குத் திருநீறு வாழ்த்தி அளித்தார்.

நம்பிராசன் முதியவரின் திருவடிகளை வீழ்ந்து வணங்கினான். "சுவாமி தாங்கள் இந்த மலைக்கு வந்த காரணம் யாதோ?" என வினாவினான் நம்பிராசன்; "நம்பி இந்தக் கிழப்பருவம் நீங்கவும் இங்குள்ள குமரியிலே ஆடவும் வந்தேன்" என்று அருளினார். எம்பெருமான் குமரியென்றது தீர்த்தமெனக் குறிப்பிட்டார்.

"நம்பி, சுவாமி தாங்கள் கூறிய தீர்த்தத்தில் முழுகிச்சுகமே இருப்பீராக! எனது புதல்வியும் இங்கு தனித்திருக்கின்றாள். தாங்களும் அவளுக்குத் துணையாக இருப்பீராக" என்று கூறினான். ஆறுமுகம் கரந்த அண்ணலும் நன்றென அருளினார்.

வள்ளிநாயகியிடம் முதியவரை நம்பி அழைத்துச் சென்றார். "அம்மா இம்முதிய முனிவர் உமக்குத் துணையாக இருப்பார்" என்றான். காய், கனி, தேன், தினைமா என்பன வள்ளிநாயகியிடம் அளித்துவிட்டு நம்பி பரிவார வேடருடன் சென்று விட்டான்.

நம்பிராசன் தன்மனை சென்று விட்டான். முருகப்பெருமான் வள்ளிநாயகியின் பக்தியைச் சோதித்தார். வள்ளிநாயகியார் தன் முருகபக்தியை முருகநாமத்துடன் பாடலாகப் பாடினாள்.

**"முடியாப் பிறவிக் கடலிற்புகார் முழுதும் கெடுக்கும்**
**மிடியாற் படியில் விசனப்படார் வெற்றிவேற் பெருமான்**
**அடியார்க்கு நல்ல பெருமான் அவுணர் குலமடங்கப்**
**பொடியாக்கிய பெருமான் திருநாமம் புகல்பவரே!"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமான் முதலில் வேங்கை மரமானது, ஒருவன் ஒருத்தி மீது மோகம் கொண்டுவிட்டால் மரமாகி விடுவான் என்பதை உணார்த்துகின்றது. பெண்ணாசை கொண்டோன் விரைவில் கிழவனாவான் என்பதைக் குறிக்க முருகப்பெருமான் கிழவனாகமாறினார்.

கிழவருக்குப் பசி உண்டாயிற்று. அதனால் அவர் பசி, பசி, என வள்ளி நாயகியிடம் கூறி வருந்தினார் வள்ளியம்மையார் தேனும் தினைமாவும் நல்ல கனிகளும் முதியவரிடம் கொடுத்தார். முதியவரும் ஆவலுடன் வாங்கி அவற்றை உண்டார். விக்கல் எடுத்துவிட்டது தண்ணீர் தண்ணீரெனத் தவித்தார்.

சுவாமி இங்கேயுள்ள ஆறுமலைகளைத் தாண்டிச் சென்றால் ஏழாவது மலையில் சுனை இருக்கின்றது. அங்கு சென்று தாங்கள் தண்ணீர் பருகலாம் என வள்ளிநாயகி விளம்பினாள்.

"பெண்ணே! நானோ முதியவன். வயது முதிர்ந்தவன் மலைவழி அறியேன் நீ வந்து வழிகாட்டு" என்றார் முதியவர். வள்ளிநாயகியார் முதியவரை வேறுபாடின்றி அன்புடன் மிகவும் பக்குவமாக முதியவரின் 'கைகளைப் பிடித்துக்கொண்டு சென்றார். சுனையில் நீர் பருகச் சென்றார். ஆறுமலைகளையும் தாண்டியுள்ள சுனை ஆறு பத்மங்களுக்கு (ஆறு ஆதாரங்கள்) அப்பாலுள்ளசகஸ்வம், மூலாதாரம், சுவாதிட்டானம், மனிபூரகம், அனாகதம், விருத்தி, ஆக்ஞை என்ற சக்கரங்கள் தாண்டியுள்ள அமிருதப் பொழிலும் யோகி அடையும் இறுதி ஸ்தானமுமாகிய சகஸ்ராத்தில் தானே பரமனும் ஜீவனும் கூட வேண்டும்? ஆறுபத்மங்களை உடலில் உயிர்நிலை தொடங்கிமுறையே உடலின் மேல் பகுதிகளில் உள்ளவை. அந்த ஏழாவது இடத்தில் இறைவனுக்கு ஆன்மா தன்னை அர்ப்பணம் செய்து வழிபட வேண்டும் என்பது தத்துவமாகும். முதியவருக்குப் பசித் துன்பம் நீங்கி விட்டது. வள்ளிநாயகி மீது காதலருட்பிரவாகம் முதியவருக்கு ஏற்பட்டது. பெண்ணமுதே எனக்குப் பசியும் நீங்கிற்று தாகமும் நீங்கிற்று உன்மீது வைத்த மோகம் மட்டும் நீங்கவில்லை பசியையும் தாகத்தையும் தணியச் செய்தது போலவே மோகத்தையும் தணியச் செய்வாய் என்று கூறினார்.

(தொடரும்)

## ஆவுரிஞ்சு கல்

நமது முன்னோர்கள் பசுக்கள் கூடுகின்ற இடங்களில் அவை தாகம் தீர்ப்பதற்கு வசதியாகத் தண்ணீர்த் தொட்டிகளைக் கட்டி எந்நேரமும் நீர் நிரம்பிஇருக்க வகைசெய்தார்கள். அவற்றின் பக்கத்தில் பசுக்கள் தமது உடலில் ஈக்கள் முதலியவற்றால் உண்டாகும் தினவுதீர உடலை ஊரோஞ்சுவதற்கு வசதியாக உருண்டையான உயரமான கற்களை நட்டுவைத்தார்கள். பசுவைக் காக்க உணவும் நீரும் மட்டுமன்றி ஆ உரிஞ்சு கல்லும் நட்டுவைத்த முன்னோரின் தர்ம சிந்தையை என்னவென்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம்:

# சூரன் ஆணை

சிவ:சண்முகவடிவேல்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இடம்: கடற்கரை
தேவர்கள் முனிவர்கள் கவலை தோய்ந்த முகத்தினோடு கடற்கரையில் இருக்கின்றார்கள். இந்திரன் அங்கும் இங்குமாக நடமாடிக் கொண்டிருக்கின்றான்.

இந்தி: ஆ! ஐயகோ, அமரர்களுக்கும் அமரேசனான எனக்கும் முனிவர்களுக்கும் இது ஒரு பழி ஆகின்றது...!
தெய்வமே யான் யாது செய்வேன். சூரபன்மன் கடல்மீனைத் தருகென்றான்.. பழி வந்து மூடாமுன் சாகின்றது தக்கதன்றோ...! எமக்கு அதுவும் வந்து சாராது; அந்தோ! நெஞ்சு வேகின்றது! சூரன் ஆணைக்கு அஞ்சாதிருந்தால் அவன் தரும் தண்டனையைத் தாங்கவொண்ணாது......! தற்பரனை மதிக்காத தக்கன் வேள்வி அவிர்பாகத்தை உண்டதால் வந்தபழி இன்னும் முடியவில்லைப் போலும்.....!

வரு: (எதிரில் வந்து) வெள்ளை வாரணக் கடவுளே! வணக்கம் கவலை தோய்ந்த முகத்தினோடு கடற்கரையில் நிற்பது வியப்பாக இருக்கின்றது.

இந்தி: நண்பா! நின்னைக் கண்ட மாத்திரத்தில் நனி மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தி: இந்த மை வேலை தனக்கு மன்னன் நீயன்றோ....!
எனக்கு ஏற்பட்ட இடர்பாட்டினை என்னென்பே................!

வரு: நெஞ்சம் நையற்க இந்திரா! கடலரசன் நான் இருக்க என் நண்பன் புரந்தரன் புலம்புவது அழகோ?

இந்தி: சூரன் கட்டளை இட்டுள்ளான்!

வரு: என்ன!

இந்தி: கடல் மீன்களை வாரி வரும்படி பணித்துள்ளான்!

வரு: நான் எப்படி உனக்கு உதவி புரிய வேண்டும்?

இந்தி: வருண தேவனே! நின்னிலும் வலியாருண்டோ! கைவேலைப் பணிபுரிந்து திமிங்கிலம் முதலான அளவில்லாத மீன்களை இக்கடலினின்றும் கரையேற்றினால் என்னைத் துன்பக் கடலினின்றும் கரையேற்றிவனாவாய்!!

வரு: விண்ணுளோர்க்கு வேந்து நீ! மண்ணுளோர்கள் போல் கண்ணீர்க் கடலில் குளிக்கலாமா? இதோ பார்! நான் கடலினுள் சென்று எனது கரதலத்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைத்து வாரி வாரி மீன் குலங்களைத் தடங்கரையில் வரை போலக் குவித்து விடுகின்றேன். (கடலில் மறைதல்)

இந்தி: நண்பா! இந்த வேளையில் நீ எனக்குச் செய்யும் இந்த உதவியை வேறு யார் புரியவல்லார்!! (கடல் மலைகள் மீன்களைக் கரை சேர்த்தல்)

இந்தி: வருண பிரான் தந்த வாக்கில் தவறவில்லை.... தேவர்காள் முனிவர்காள்....! வாருங்கள் மீன் குவியலைப் பாருங்கள் இவற்றை ஆற்றலோடு எடுப்பது உங்கள் தொழில்.

தேவர்: நமக்கு ஏற்பட்ட இன்னலுக்கு ஆரொடு நோவோம்.....ஆர்க்கு எடுத்து உரைப்போம்.

இந்தி: சூரபன்மன் கோபங் கொள்வதற்கு முன்னவர் அவன் மாளிகையில் கொண்டு சேர்க்க வேண்டும்.

தேவர்: மீன் குவியலை சுமையாகப் பிணிப்போம்... பின்னர் தலையில் வைத்துச் சுமந்து செல்வோம்...

(திரை)

**காட்சி: 4**

**இடம்: வீதி**

தேவேந்திரன் முன்னே செல்லுகின்றான். தேவர் முனிவர் மீன் சுமையோடு பின்னே செல்லுகின்றார்கள்.

தேவர்: புகழ் படைத்த சூரபன்மன் என்னும் தீயவனால் முன்பும் துயர்க் கடலில் மூழ்கினோம் வலி அழிந்தோம். இப்போது இந்தப் பழித்தொழிலைப் பரித்துள்ளோம். இன்னும் என்ன இழிதொழில் செய்வோமோ! நாம் அறியோம்.

முனி: நீலமலை போல அசைகின்ற பரிதியான் பணியால் அவமானம் அலராகின்றது! அது உயிரை அரிகின்றது! ஐயோ! விதியே! நமக்கு இது தீர்கின்ற காலமும் உளதோ? உரையாய்........!

இந்தி: பூவுலகந் தன்னில் பொருந்திய மானிடமும் பாவம் என்று பகருகின்ற இத் தொழிலை ஏவர் புரிகின்றார். எமக்கு வந்து எய்துவதோ? சுவர்க்க இன்பத்திலும் நரகத் துன்பம் சிறப்பானது!

தேவர்: இந்த இழிதொழிலை ஏற்றுள்ளோம். மேலான ககன வாழ்வை விரும்பி யாம் செய்த மிக்க தவமும் வினையாய் விளைந்து விட்டது.

இந்தி: வேத நெறியை விலக்கினோம் மேலான ஞான நெறிக்குப் புறம்பானோம்.

முனி: வெஞ்சூரன் கோபத்தால் கூறுகின்ற குற்ற நெறிக் கொள்கையில் நிற்கும் எம்மை விட உயர்ந்தார் யார்?

இந்தி: தேன் சொரியும் கற்பக மர நிழலில் கீழ் கனவு காணும் வானவர்கள் என்று மதிக்கும் மாண்புடையோம்.

தேவர்: ஈனமோடு மீன் சுமந்து எல்லோர்களும் நகைக்கத் தானவர் முன்பு செல்வதிலும் சாதல் மிக நன்று!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசு 1: இதோர் கடல் வயிற்றைக் கலக்கி கொஞ்ச மீன் தேவர்கள் கொண்டு வருகின்றார்கள்

அசு 2: மீனா கொண்டு வருகிறார்கள்1

அசு 1: வேறு என்ன சுமக்கின்றார்கள்?

அசு 2: சுமையை வடிவாய்ப் பாரப்பா! வானில் செல்லும் சூரியன் முன்னுண்ட மீன் கோதை அல்லவா நமக்குக் கொண்டு வருகின்றார்கள்.

அசு 1: இத் தேவர்கள் அலைகடல் மீனைத் தலையில் சுமந்து வருகிறார்களே! இவர்களுக்குக் கொஞ்சமேனும் நாணம் இல்லையோ, அண்ணே?

அசு 2: அட தம்பி! தீங்கு செய்தால் யாரேனும் செய்யாதது என்னப்பா?

அசு 1: இவர்கள் ஊமைகளோ? பேச்சொன்றுமின்றிப் போகின்றார்களே! பழமையோடு பரதவர்கள் பார்க்கின்ற பரவைத் தொழில் பந்தத்தொடு இவர்கள் செய்ய வருமோ?

அசு 2: அண்ணே! அதிகமாகச் சிந்திக்காதே! எல்லாம் விதியின் விளையாடல்...

அசு 1: அப்படிச் சொல்லடா தம்பி இன்னும் ஒரு தரம் இந்த விண்ணவர்கள் எல்லாம் வேத நெறி ஒழுக்கத்தை விட்டு விட்டார்கள். வினையைப் பெருக்குகின்ற உலகாயுதத்தில் ஊறிப்போய் விட்டார்கள்.

அசு 2: ஆமா அண்ணே! ஊனுக்கு இன்பம் வேண்டி உழலத் தொடங்கி விட்டார்கள்.

அசு 1: அது மட்டுமா அண்ணே!! இந்தத் தேவர்கள் குற்றமில்லாத நங்கள் குலத்திற்குக் கொஞ்சக் கொடுமையா செய்தார்கள்? இருந்து பார் தம்பி.... இந்த இமையோர்கள் இன்னும் ஏது படார்கள்!!

அச 2: மண்ணவர்களும் இகழும் கொடும்பழி தான் வரவும் விண்ணவர்க்கு இறைவன் உயிர் விட்டானா?

அசு 1: அவனுக்குக் கண்ணோ பெரிது! கருத்தோ சிறிது!!

அசு 2: அவன் பெண்ணோ?

அசு 1: ஆணோ?

அசு 2: இல்லை... அலி..

அசு 1: அல்லது பேடு தானோ?

அசு 2: ஆர் ஐயா கண்டார் (இருவரும் சிரிப்பு)

(திரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி: 5**

**இடம்: மாளிகை**

காவ: (ஓடிவந்து சூரனை வணங்கி) மணிமுடிச்சூர மன்னவருடைய அடி பணிகின்றேன்!! வீரமகேந்திர மன்னாதி மன்னர் வாழ்க?

சூர: காவலனே! வந்த காரணம் யாது?

காவ: அசுரர்கள் மன்னனுடன் வாயில் காத்து நிற்கின்றார்கள்!!

சூர: அவர்களை உள்ளே வர அனுமதி...

காவ: உத்தரவு! (செல்லுகின்றான் சிறிது நேரத்தில் இந்திரன் தேவர் முனிவர் மீன் சுமையோடு வருகின்றார்கள்)

சூர: இந்திராதி தேவர்கள் வாருங்கள்!

இந்தி: மன்னருக்கு வணக்கம் செலுத்துவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்!

சூர: அதை நான் அனுமதிக்கின்றேன்!

இந்: (மீன் சுமைகளை இறக்கி) ஆ! தெய்வமே! செத்துப் பிழைத்தோம்....! கடல் மீனைக் கரையேற்றி கட்டிச் சுமந்து கால் நடையாகக் கடுகி வருவதென்றால்.........!! (பெருமூச்சு)

சூர: ஆகா! அமரர்கள் வேந்தனானாலும் என் ஆணையை அனுசரித்துள்ளாய் இந்திரா......!

இந்: தேன் துளி சிந்தும் மலர் மாலை அணிந்த சூரபன்மா அண்டங்களுக்கு அரசர் என்றால் அமரர்களுக்கும் அரசராவார்!!

சூர: நாளும் இவ்வாறு நன்மீன்களோடு நம்மிடத்தில் வருதல் வேண்டும்!

இந்: அரசே! அவ்வாறு பணி செய்வோம்

(திரை)

**முற்றும்**

உங்கள் அபிமான '**அருள்ஒளி**' கிடைக்கும் இடங்கள்

**அலுவலகம்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

**ஸ்ரீ தர்க்காதேவி மணிமண்டபம்,**
**கோவில் வீதி,**
**நல்லூர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதர் பாடிய கதிர்காமம்

**சைவத்திரு. கா. சிவபாலன் அவர்கள்**

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கதிர்காமம் செல்வோர், கதிர்காம முருகனைக் கோயிலில் வழிபட்டு விட்டுச் செல்லக்கதிர்காமம் செல்வர். அங்குள்ள மாணிக்கப்பிள்ளையாரை வணங்கியபின், திரும்பக் கதிர்காமம் வந்து கங்கையில் நீராடிவிட்டு, **குன்றுதோறாடும் குமரன் கொலுவிருக்கும் கதிரைமலை உச்சிக்குச் செல்வர். கதிர்காம யாத்திரையின் முழுமையான பெறுபேறும், நிறைவும் கதிரைமலைத் தரிசனமேயாம்.**

"அதிரவரு மாணிக்க கங்கைதனில் மூழ்கி
அன்பொடு சிவாயநமஎன அருணீறு பூசி
முதிருமன் பால்நெஞ்ச முருகவிழி யருவி
முத்துதிர மெய்ப்புளக மூரவுரை குளறப்
புதியசெந் தமிழ்மாலை புகழ்மாலை சூடிப்
பொருவில்கந் தாசுகந் தாவென்று பாடிக்
**கதிரைமலை காணாத கண்ணென்ன கண்ணே**
**கர்ப்பூர வொளிகாணாக் கண்ணென்ன கண்ணே**"

என, இலங்கை வளம் பற்றி நவாலியூர், திரு. க. சோமசுந்தரப்புலவர் பாடிய நெஞ்சையள்ளும் கவிமலர்களுள், கதிர்காமம் பற்றிப் பாடிய இதழ் இதுவாகும்.

கதிர்காமத்தின் மறுபெயர்கள் **ஏமகூடம், கார்த்திகேயபுரம், கதிர்வேலன் மலை, மாணிக்கநகர், மணிபுரம், கந்தவேள் கோயில்** முதலானவையாம். கதிர்காமத்திற்குரிய தீர்த்தம், "**மணிதரளம் வீசி யணியருவி**" **எனப் போற்றப்படும் மாணிக்கங்கை.** அருணகிரிநாத சுவாமிகளது **திருப்புகழில்** இடம்பெற்ற திருத்தலம் இதுவாகும். சீதையைத் தேடி வந்த அநுமானால் வணங்கப்பட்ட தலமும் இதுவாகும்.

கதிர்காமத்தையொட்டிப் பல கந்தசுவாமி கோவில்களும், ஊர்களும் கிழக்குப் புறத்திலும், தெற்குப் புறத்திலும் தோற்றியுள்ளன. கழுத்துறைக்குத் தென்பாலுள்ள "**வேலபுரம்**" மட்டக்களப்புக்குத் தெற்கேயுள்ள கடற்றுறையான **கந்தபாணன்துறை** (இன்றைய திருக்கோவிலின் பழைய பெயர் கந்தபாணன்துறை) போன்றவை இவற்றுள் சிலவாம். அவை யாவற்றையுங் கொண்டு வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் சைவத்தமிழர் இவ்விடங்களில் வாழ்ந்திருக்கின்றனர் என்பதை யாம் உணர்ந்து கொள்ளலாம்.

## கதிர்காமச் சிறப்புப் பற்றிக் கூறும் நூல்கள்:

| | |
|---|---|
| கதிரமலைப்பள்ளு | எழுதியவர் பெயர் தெரியாது |
| கதிர்காமப் பிள்ளைத்தமிழ் | **புலவர் சிவங்கருணாலய பாண்டியனார்** |
| கதிர்காமவேலர் தோத்திரமஞ்சரி | **மட்டக்களப்பு வித்துவான் அ. சரவணமுத்து** |
| கதிர்காம நான்மணிமாலை | **வண்ணை நெ. வை. செல்லையா** |
| கதிர்காம புராணம் | **வதிரி சி. நாகலிங்கம்பிள்ளை** |
| கதிரமலை வேலவர் பதிகம் } | **தங்கத் தாத்தா நவாலியூர்** |
| கதிரைச் சிலேடை வெண்பா } | **க. சோமசுந்தரப்புலவர்** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கதிர்காம முருகேசர் ஆறாதார சடாட்ச அந்தாதி | வறுத்தலைவிளான் முத்துக்குமார ஆசாரிய சுவாமிகள் |
| கதிர்காமவேலர் திருவருட்பா | சுழிபுரம் திருஞானசம்பந்த உபாத்தியாயர் |
| கதிர்காமசுவாமி பதிகம், கதிர்காமசுவாமி கீர்த்தனம் | வயாவிளான் ஆசுகவி க. வேலுப்பிள்ளை |
| கதிர்காமமுருகன் திருப்பள்ளி எழுச்சி<br>கதிர்காமமுருகன் திருவூஞ்சல்<br>கதிர்காமமுருகவேள் பிள்ளைத்தமிழ் | வட்டுக்கோட்டை திரு. க. சிதம்பரநாதன் |
| கதிரை யாத்திரை விளக்கம் | வண்ணை விநாயகமூர்த்திச் செட்டியார் |
| கதிர்காமத்து அம்மானை<br>கதிர்காம மான்மியம் | அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்கள் |

**சைவ ஆலயமாகிய கதிர்காமம், சைவ மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகப் பரிபாலிப்பதற்குச் சைவ மக்களிடம் கையளிக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோள் ஒன்றை, 1908ஆம் ஆண்டு முதன் முதலாக சேர்.பொன். அருணாசலம் தலைமையில் கொழும்பில் இயங்கி வந்த அகில இலங்கைச் சைவபரிபாலனசபையினால் விடுக்கப்பட்டது. இதே வேண்டுகோளுடன் ஆலயத்திற்குச் சேரும் வருவாய்கள் கோயிற் தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்ற வேண்டுகோளொன்றை மேலும் கூடச் சேர்த்த விண்ணப்பம் ஒன்று செய்யவேண்டுமென சேர் அருணாசலம் மகாதேவா தலைமையில் 18-03-1938இல் கொழும்பு விவேகாநந்த சபையில் கூட்டப்பட்ட சைவப்பெரியார்களதும், சைவதாபனங்களதும் கூட்டத்தில் ஒருமனதான தீர்மானஞ் செய்யப்பட்டது. ஆயினும், அக்காலத்தில் ஏற்பட்ட 2ஆம் உலகப்போர் நெருக்கடி காரணமாக இவ்வேண்டுகோள் விடுக்கப்படவில்லை. அதன்பின் இதுபற்றிக் கேட்கப்பட்டதாக எட்டவில்லை என்ற செய்திகளை அறிகிறோம்.**

**கதிர்காமம் பிள்ளைத்தமிழ்ச் செய்யுளொன்று**
**மாணிக்க நிறைகங்கை யாடியுன் னைப்பணிய**
**வந்திடும் பூதலத்தோர்**
**வாயூமர் பாடவும் குருடர்கள் பார்த்திடவும்**
**மலடிகள் மைந்தர் பெறவும்**
**நாவிற் குமாரவேலா வெனும் அன்பரைக்**
**கரடி புலி யானை சிங்கம்**
**காணிற் பணிந்தஞ்சி யோடவும் கந்தனே**
**கண்கண்ட தெய்வ மெனவே**
**யானிப்பொன் முத்திமண்ட மேவுகச்சியினும்**
**அடியேனை ஆண்டு கொண்டெ**
**னாகத்தில் வந்தபிணி தீர்த்திடவு முன்னிற்கு**
**மாறுமுக மெய்த் தெய்வமே**
**சேணிற் புலோமசை வளர்த்த பெண்பிடிகணவ**
**செங்கீரை யாடியருளே**
**தேவரொடு மனிதர்பணி கதிர்காமவேலனே**
**செங்கீரை யாடி யருளே.**

## திருப்புகழ்

**இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்**
**பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே**
**குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா**
**கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே. (முற்றும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் விருந்து

# தண்ணீர் என்றாலும்....

அருட்சகோதரி ஜதீஸ்வரி அவர்கள்

அன்பான பிள்ளைகளே புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். எல்லோருடைய நலனுக்காகவும், நாட்டு நலனுக்காகவும் நாம் ஏல்லோரும் இறைவனிடம் பிரார்த்தனை செய்வோம். "பிரார்த்தனை என்பது இறைவனுடன் நாம் பேசும் மொழி" என்று காந்திமகான் சொல்லியிருக்கிறார். காந்திஜி மிகுந்த கடவுள் நம்பிக்கை உடையவர். சிறந்த அகிம்சாவாதி மிகவும் கண்ணியமான மக்கள் தொண்டர். அவரைப் பற்றி ஒரு சிறு கதை சொல்லுகிறேன்.

ஒரு முறை காந்திஜியும் ஜவர்கலால் நேருவும் ஒரு காங்கிரஸ் கூட்டத்திற்காக தூரத்து இடமொன்றிற்குச் சென்றிருந்தார்கள். அங்கே இரண்டொரு நாள் தங்கவேண்டி இருந்தது. அந்த இடத்தில் கிணற்றில் இருந்து தண்ணீர் அள்ளித்தான் பயன்படுத்த வேண்டும். காங்கிரஸ் தொண்டர்கள் காந்திஜியும் நேருஜியும் உபயோகிப்பதற்கு வாளிகளில் தண்ணீர் அள்ளி வந்து வைத்து உதவுவார்கள். நல்ல கோடைக்காலம் ஆதலால் குளிப்பதற்கும், குடிப்பதற்கும் மற்றைய தேவைகளுக்கும் தொண்டர்கள் பார்த்துப் பார்த்து தண்ணீர் அள்ளி வைப்பார்கள். நேருஜி தாராளமாகத் தண்ணீரைச் செலவழிப்பார். காந்திஜியோ மிகவும் சிக்கனமாகவே நீரைப் பயன்படுத்துவார் நேருஜி முகம் கழுவவே வாளித் தண்ணீர் முழுவதையும் செலவிடுவார். காந்திஜியோ செம்பிலே அளவாக அள்ளி மிக நிதானமாக கை, கால், முகம் கழுவுவார். இது கண்டு நேருஜி சிரிப்பார். "பாபுஜி! ஏன் இப்படித் தண்ணீரை மிச்சம் பிடிக்கிறீர்கள்? கிணற்றிலே தாராளமாக தண்ணீர் இருக்கின்றது. அள்ளித் தருவதற்கு தொண்டர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். பயப்படாமல் நீங்கள் தண்ணீரை வேண்டியளவு செலவழிக்கலாம்" என்று சொன்னார்.

"ம்........ வேண்டிய அளவு?.......?" என்று தனக்கே உரிய குறும்புச் சிரிப்புடன் கேட்டார் காந்திஜி. பின்பு ஆழமான அன்போடும் கனிவோடும் அவர் நேருவிடம் சொல்லத் தொடங்கினார்.

"இதோ பாருங்கள் ஜவர்கர்; தண்ணீர் இயற்கை நமக்குத் தந்திருக்கிற அற்புதமான கொடை. தண்ணீர் பூமித்தாயின் மதிப்பு மிகுந்த சொத்து. அதை நாம் நமக்கு தேவையான அளவு மட்டும் தான் எடுத்துக் கொள்ள வேண்டும். ஊதாரித் தனமாகத் தண்ணீரை செலவழிப்பது உண்மையில் பெரிய தவறு. குற்றமென்றே கூறலாம். தண்ணீர் மட்டுமல்ல எந்தப் பொருளையும் தான்...... ஒருவர் தமது தேவைக்கு அளவானதை மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும். தேவைக்கு அதிகமாக எடுப்பதோ வைத்திருப்பதோ திருட்டை விட பெரிய குற்றம் என்றே நான் கருதுகிறேன்"

காந்திஜி இப்படிக் கூறியவுடன் நேரு சிந்திக்கத் தொடங்கினார். அதன் பின் அவர் மிகவும் நிதானமும் பொறுப்புணர்ச்சியும் இயற்கையிடம் பயபக்தியும் கொள்ளத் தொடங்கினார். மிகச்சிறந்த தலைவராக வளர்ந்தார். பிள்ளைகளே! இயற்கை நமக்கு அன்புடன் தரும் தண்ணீர் காற்று போன்ற இயற்கை வளங்களை நாம் மதிக்கப்பழக வேண்டும். அவற்றை மாசுபடாமல் காப்பாற்றவும் முயல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தேவையான சேவை

**திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**
'**மயூரம்**' கோப்பாய்.

நோய் கொடியது. தான் பீடித்தவரை வருத்தி கொன்றுவிடும். மாறாத நோயேதும் வந்தாலொழிய வயோதிபம் வருமுன் நோயைப்பற்றி நாம் அதிகமாகக் கவலைப்படுவதில்லை. வயோதிபம் நெருங்க நெருங்கத்தான் நோயைப் பற்றிய பயம் அதிகரிக்கிறது.

நோய் வந்தால் வேதனைப்படவேண்டுமென்பதற்காகவும் பணம் விரயமாகும் என்பதற்காகவும் அதனால் மரணமடைய நேருமோ என்பதற்காகவும் கவலைப்படுவதைவிட அந்த வேளையில் மற்றவர்களுக்குக் கஷ்டங் கொடுத்துக் கொண்டிருக்கப் போகின்றோமோ? எம்மை யார் கவனித்துக்கொள்ளப் போகின்றார்கள்? என்பது குறித்துச் சிந்திப்பதே அவர்களுக்கு அதிக பயத்தைத் தருகின்றது.

திருமணமாகாத ஒருவர் "எனக்கு இதுவரை திருமணஞ்செய்யவில்லை என்பது பற்றி அதிகம் கவலையிருக்கவில்லை. இப்பொழுது தான் வருத்தம் துன்பம் வந்தால் உதவிக்கு ஒருவருமில்லையே என்று கவலையாயிருக்கிறது என்று கூறுகிறாள். பிள்ளையில்லாதவர் "ஒரு பிள்ளையிருந்தால் பிற்காலத்தில் என்னைப் பார்க்கும். அதுதான் கவலைப்படுகிறேன்" என்கிறார். பிள்ளைகளிருப்பவர்களுக்கும் "பிள்ளைகளுக்கு வெவ்வேறு வேலைப்பழு", "வெளிநாடு சென்றுவிட்டார்கள்", "பொறுப்பை ஒருவருக் கொருவர் தட்டிக்கழிக்கிறார்கள்" எனப் பல்வேறு வகைப்பட்ட பிரச்சனைகளிருக்கின்றன.

முற்காலத்தில் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சகோதரர், அவர்களின் வம்சத்தவர் என அருகருகே குடியிருந்து ஒருவருக்கொருவர் உதவியாக வாழ்ந்தனர். வீட்டிலிருந்து நோயாளர்களைக் கவனித்துக் கொள்ள பிள்ளைகளும் உறவினருமிருந்தனர்.

இப்பொழுது அந்தநிலை மாறிவிட்டது. பல்வேறு காரணங்களால் பெரும்பாலான உறவினர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். அலுவலகத்தில் பணியாற்றுவோர் நீண்டகாலம் லீவு பெற்று உதவிசெய்ய முடியாதுள்ளது. இதனால் 'சாகமுன்பு கூட வந்துதவுவார் ஒருவரில்லை' என்று பாடும் நிலை தோன்றியுள்ளது. நோயாளிகளையும் வயோதிபரையும் அரவணைத்துப் பார்ப்போர் அரிதாகிவிட்ட காலமிது.

நோயுற்றவருக்கு அருகிலிருந்து உணவும் மருந்தும் கொடுத்துப் பார்த்துக்கொள்ள ஆட்களிருந்தாலும், மலம், சலம், எடுத்து அவர்கள் உபயோகித்த துணிகளைத் துவைத்து பணிசெய்ய எவருமே விரும்புவதில்லை. இதற்கு இவற்றைச் செய்வது இழிவானது எனக் கருதுவதே காரணமாகும்.

இது ஒரு சேவையாகும். இழிவான தொழில்லை. ஏழைகளுக்கு உதவுவது போன்ற ஒரு தர்மகைங்கரியமாகும். உதவியற்றவர்களுக்கு உதவும் பணி.

அழுக்கு, துர்நாற்றம் போன்றவற்றை சகிக்க முடியாத காரணத்தாலேதான் ஒருவரும் இதைச் செய்வதில்லையென்று இக்காலத்தில் கூறமுடியாது. வெளிநாட்டிற்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று நமது பிள்ளைகள் இதே தொழிலைச் செய்கிறார்கள். ஆனால் இங்கு செய்யத் தயங்குகிறார்கள். வெளிநாட்டில் செய்வது போல கையுறை நவீன உபகரணங்கள் ஆகியவற்றை உபயோகித்து இங்கும் அதே பணியைச் செய்யலாம். முன்புபோல் கஷ்டப்படத் தேவையில்லை.

இப்பணி தரக்குறைவானது என்று கருதுவதனாலேயே மருத்துவமனைகளில் பணியாற்றுவோர் கூட இதனைச் செய்ய மறுக்கின்றனர். அப்பணியைச் செய்வோரும் அன்பாகவும், பண்பாகவும் நடக்கத் தெரியாதோராக உள்ளனர்.

இப்பணி தரக்குறைவானதென அதைச் செய்வோர் மட்டும் எண்ணுகிறார்களெனக் கூறமுடியாது. இப்பணியைச் செய்ய ஒருவர் முன்வந்தால், அதைச் செய்விப்போரும் அவரை மரியாதையாக நடத்தத் தவறுகின்றனர். அப்பணி செய்வோர், இழிவானவர்கள் என்பதுபோல் நடத்துகின்றனர். இது தவறாகும். இப்பணியைச் செய்ய எவ்வளவு சகிப்புத் தன்மையும் சேவை மனப்பான்மையும் தேவையென்பதை எல்லோரும் நினைத்துப் பார்க்க வேண்டும். சேவை செய்வோருக்கு நாம் எவ்வளவு மதிப்பும் மரியாதையும் கொடுக்கிறோம். அதே போன்ற மதிப்பும் மரியாதையும் இவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும்.

சேவை மனப்பான்மையுள்ளவர்களை நோயாளரையும் வயோதிபரையும் பராமரிக்க பயிற்சியளித்து, இதற்கென ஒரு நிறுவனத்தை அமைத்தல், இன்றைய மாறிவரும் எமது சமுதாயத்திற்கு அத்தியாவசியமாக உள்ளது. இதில் ஈடுபடுவோர் சேவை மனப்பான்மையுள்ளோராக இருக்கின்றார்களா என்பதைக் கவனித்து அவர்களைத் தேர்ந்தெடுப்பது முக்கியமானதாகும். இன்று வேதனம் கிடைக்குமென்பதற்காகப் பலர் தமக்குச் சற்றேனும் பொருத்தமில்லாத தொழில்களைச் செய்ய இணைந்துவிட்டு, தாமும் கஷ்டப்பட்டு, மற்றையோரையும் கஷ்டப்படுத்திவிடுகிறார்கள். பொய், திருட்டு, சுத்தமின்னை, கேலியும் கிண்டலுமான பேச்சு என்பவை இல்லாதோராகவும் பண்பும் அன்பும் தொண்டு மனப்பான்மையும் அமைந்தோராகவும் இச்சேவை புரிவோரிருக்கு வேண்டும்.

இப்பணி செய்யத் தேவையான நவீன உபகரணங்களை அவர்கள் உபயோகிக்க வசதி செய்து கொடுக்க வேண்டும். சுத்தமும் சுகாதாரமும் பேணப்பட இவை அவசியமாகும். இவர்கள் சீருடை அணிவது பல நன்மைகளைத் தரும். அதுவே ஒரு மதிப்பையும் மரியாதையையும் பார்ப்போரது மனங்களில் ஏற்படுத்தும். அணிவோரது மனங்களிலும் அச்சேவைக்கேற்ற மனப்பாங்கை அது ஏற்படுத்தும். இராணுவச் சீருடை அணிவோரிடம் வீரமும் கம்பீரமும், தாதிகளுக்கான சீருடை அணிவோரிடம் அன்பும் பரிவும் தோன்ற வேண்டும். தோன்றாது போனால் அவர்கள் அந்தத் தொழில்களுக்குத் தகுதியானவர்களல்ல என்பது தான் காரணமாகவிருக்கும்.


சேவைதானே செய்ய வந்துள்ளார்களென்று அவர்களது தேவைகளை நாம் கருத்திலெடுக்காது விடக்கூடாது. ஓய்வு, ஊதியம் முதலான சகல வசதிகளும் அவர்களுக்கு அளிக்கப்படவேண்டும்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் இத்தகைய தொண்டு அமைப்புக்கள் உருவாக்கப்படுவது இன்று காலத்தின் தேவையாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அமரர் திரு. கார்த்திகேசு சிவசுப்பிரமணியம் அவர்கள் மறைவையிட்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை



எங்கள் தேவஸ்தானத்துடன் மிகவும் நெருக்கமாகப் பழகிய திரு. கா. சிவசுப்பிரமணியம் அவர்களின் திடீர் மறைவுச் செய்தி எங்கள் அனைவரையும் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. இவர் சிறந்த பண்பாளர். எங்கள் தேவஸ்தானம் ஆண்டுதோறும் வரவு செலவுக் கணக்குகளை கணக்காய்வு செய்து அனைத்து மக்களுக்கும் சமர்ப்பித்து வருகின்றது. இந்த வகையில் எங்கள் தேவஸ்தான கணக்குகளை செம்மையாகக் கணக்காய்வு செய்து வழங்கும் நிறுவனம் திரு. "S. செல்வேந்திரா அன் கோ" ஆகும். திரு. S. செல்வேந்திரா நிறுவனத்தில் பல ஆண்டுகளாகக் கணக்காய்வுப் பகுதியில் பணியாற்றி வருபவர் என்ற பெருமைக்குரியவர் இவர்.

எங்கள் தேவஸ்தானப் பணிகளை எல்லாம் நன்கு மதித்து வந்த திரு. கா. சிவசுப்பிரமணியம் அவர்கள் இனிமையான பேச்சும், அடக்கமான சுபாவமும் கொண்டவர். அவர்களின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்தனை செய்வதுடன் அவரின் மனைவி, மகன், உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அமைகின்றோம்.

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[அருள்ஒளி 33ஆவது மலரின் அட்டையின் பின் பக்கத்தில் திருச்சி சுவாமிகளின் படம் வெளியாகியது. அவர் பற்றிய ஒரு நோக்கு]

# திருச்சி சுவாமிகள்

ஆத்மீக உலகில் பெரு மதிப்புப் பெற்றவர் ஸ்ரீலஸ்ரீ திருச்சி சுவாமிகள். மிக இளம் வயதில் ஆத்மஞானம் பெற்று தூய துறவு வாழ்வு வாழ்ந்தவர் இவர். காரைக்குடி செட்டிநாட்டு மைந்தனாகிய இவர் நிறைந்த செல்வக் குடும்பத்தில் பிறந்தவர். கண்டி – கதிர்காம யாத்திரைக்கு 1950களில் இலங்கைக்கு வந்தபோது கண்டி பெரகராவில் மதம் கொண்ட யானை பலரைத் துன்புறுத்தியபோது துணிந்து யானை முன் சென்று மதயானையை அடக்கி தன்ஞானத்தை வெளிப்படுத்தியவர் திருச்சி சுவாமிகள். ஞான குருவை திருச்சியில் கண்டு அருள் பெற்ற காரணத்தால் திருச்சி சுவாமிகள் என்ற நாமம் நிலைபெற்றது. இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்று பல நூறு பேரை ஆன்மீக வாழ்வுக்கு ஆட்படுத்திய பெருமகான் இவர். தூய வெள்ளை வேட்டி வெண்சாலை நெற்றியில் குங்குமம் இவரது அடையாளமாக ஒளிகாட்டும். பெங்களூரில் கெஞ்சனகள்ளி என்ற காட்டுப்புறத்தில் ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்த இப்பெருமகனார் ஆச்சிரமச் சுற்றாடலை பெரு நகரமாக்கினார். இராஜஇராஜேஸ்வரி நகர் என இன்று அழைக்கப்படும் இப்புனித நகரில் மிகப்பெரிய கருங்கற்கோவில் சுவாமிகளின் அருளாட்சியால் கட்டப்பட்டுள்ளது. 108 அடி உயரமான பெருங்கோபுரத்துடன் அமைந்த ஆலயம், ஆரம்பப்பாடசாலை, உயர் நிலைப்பள்ளி, பல்கலைக்கழகம், என்று பல நிறுவனங்கள் இத்திருநகரை இன்று அலங்கரிக்கிறது. மிகப்பெரிய வேதபாராயணப் பாடசாலையில் கற்கும் ஒவ்வொரு மாணவரும் ஒரு பசுவை வளர்க்க வேண்டும் என்பது ஆச்சிரமத்தின் கட்டுப்பாடு. அதிகாலை 4 மணிக்கு நித்திரையால் எழுந்து பசுவை நீராட்டும் சிறார்களின் ஒழுங்கு பார்ப்பவர்களைப் பரவசமூட்டும் ஆதரவற்ற சிறார்களை வளர்க்கும் இல்லங்கள் பல சுவாமிகளின் கைலாய ஆச்சிரமத்துக்கு சொந்தமாகவுள்ளது. யாழ்ப்பாணம் தவத்திரு யோகசுவாமிகளின் தொடர்பு திருச்சி சுவாமிகளுக்கு இருந்து வந்துள்ளது. இதனால் யோகசுவாமிகளின் சீடராகிய அமெரிக்கத் துறவு சுப்பிரமணிய சுவாமிகள் கைலாச ஆச்சிரமத்துக்குச் சென்று தங்குவது வழக்கம். அமெரிக்காவிலுள்ள கவாய்த்தீவில் கட்டப்பட்டு வரும் சிவாலயம் கைலாச ஆச்சிரம சிற்பக் கல்லூரியில் உருவாக்கப்பட்டு கப்பலில் ஏற்றிச் சென்று பகுதி பகுதியாக கட்டப்பட்டு வருகிறது.

## நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்துக்கும் சுவாமிகளுக்கும் உள்ள தொடர்பு

நல்லை ஆதீனத்தின் முதலாவது குரு ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் மணிபாகவதர் என்ற நாமத்தோடு சொற்பொழிவு ஆற்றி வரும் வேளை காரைக்குடியில் திருச்சி சுவாமிகளை சந்திக்கும் வாய்ப்புப் பெற்றார். பின் கைலாச ஆச்சிரமம் சென்று சுவாமிகளின் ஆணைப்படி மதுரையில் விசேட தீட்சை பெற்று நல்லை ஆதீனத்தை தோற்றுவித்தார். நல்லை ஆதீனத்தின் இரண்டாவது குரு முதல்வரும் திருச்சி சுவாமிகளிடம் சென்று வருவார். இந்தியப் பிரதமராக விளங்கிய அனைவரும் கைலாச ஆச்சிரமத்துக்கு பதவி ஏற்ற பின்பு சென்று ஆசிபெறுவது வழக்கம். பண்டாரநாயக்கா குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் இலங்கையில் இருந்து கைலாச ஆச்சிரமத்துக்கு போய்வருவர். மதயானை அடக்கிய வரலாறு சிங்கள நூல்களிலும் இப்பெருந்தகை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. உயர்ந்த ஆத்மீக ஞானியாக விளங்கிய திருச்சி சுவாமிகள் சமீபத்தில் சமாதி அடைந்து விட்டார்கள். உலகம் முழுவதும் வாழுகின்ற இந்து மக்களின் உயர் ஞானியாக விளங்கிய இத்தூய துறவியின் பரிபூரண சமாதி நிலை நிட்சயமான போதும் ஏற்றுக்கொள்ள இயலாமல் உள்ளது. காரணம் ஆச்சிரம நிழலில் எத்தனை நிறுவனங்கள் பொதுமக்கள் ஆறுதல் பெற்றனர். துன்பம் துடைக்கும் நடமாடும் தெய்வம் அமைதி பெற்றது குறித்து உலகம் முழுவதும் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகிறது. அருள்ஒளியும் தனது பிரார்த்தனையைச் சமர்ப்பிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதங்கேணிக்குட்பட்ட- உதவி அரசாங்க அதிபர் பணிமனை

## சுனாமி அனர்த்தத்தால் சேதமடைந்த இந்து ஆலயங்களின் விபரம்

| கி. அ. பிரிவு | ஆலயத்தின் பெயர் |
|---|---|
| செம்பியன்பற்று வடக்கு | கடற்கரை நாகதம்பிரான் ஆலயம் |
| ,, | மாமுனை ஸ்ரீ முருகன் ஆலயம் |
| ,, | மாமுனை சக்தி கோவில் |
| ,, | மாமுனை ஞானவேல் ஆலயம் |
| மருதங்கேணி | விறுமன் கோவில் |
| ,, | முத்துமாரி அம்மன் ஆலயம் |
| ,, | ஞானவைரவர் ஆஞ்சநேயர் ஆலயம் |
| ,, | கடற்கரைப் பிள்ளையார் கோவில் |
| ,, | வைரவர் கோவில் |
| உடுத்துறை | வேம்படி முருகன் ஆலயம் |
| ,, | ஸ்ரீ முருகன் கோவில் |
| ,, | நரசிங்க வைரவர் கோவில் |
| ,, | நாகதம்பிரான் கோவில் |
| ,, | சந்தான வைரவர் கோவில் |
| ,, | ஐந்தாம்பனை பிள்ளையார் கோவில் |
| ,, | முருகன் கோவில் |
| ,, | சக்தி அம்மன் கோவில் |
| ,, | அறத்தி அம்மன் ஆலயம் |
| ,, | ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் |
| ,, | பழைய முத்துமாரி அம்மன் ஆலயம் |
| ,, | முத்தட்டு வைரவர் ஆலயம் |
| ,, | ஆலடிப் பிள்ளையார் கோவில் |
| ஆழியவளை | வெட்டு முருகையன் ஆலயம் |
| ,, | வீரபத்திரர் கோவில் |
| ,, | பிள்ளையார் கோவில் |
| ,, | ஆத்தியடிப்பிள்ளையார் கோவில் |
| ,, | பாலையடி வைரவர் கோவில் |
| வெற்றிலைக்கேணி | செல்வ விநாயகர் கோவில் |
| வத்திராயன் | ஆலடிப்பிள்ளையார் கோவில் |
| ,, | சங்குபாலர் கோவில் |
| ,, | ஸ்ரீ முருகமூர்த்தி அம்மன் ஆலயம் |
| ,, | சக்தி அம்மன் ஆலயம் |
| குடத்தனை வடக்கு | பெரியமடத்து பிள்ளையார் ஆலயம் |
| ,, | நாலாம்பனை பிள்ளையார் ஆலயம் |

**அறநெறிப் பாடசாலை**


செம்பியன்பற்று அறநெறிப்பாடசாலை - செம்பியன்பற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கிலங்கையில் சேதமுற்ற சைவத் திருக்கோயில்கள்


காரைதீவு காளி ஆலயம்


காரைதீவு காளி ஆலயம்




காரைதீவு காளி ஆலயம்


குருக்கள் மடம் சரஸ்வதி ஆலயம்
மட்/கலைவாணி மண்டபம்


காரைதீவு காளி ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


குருக்கள் மடம் மட்/கலைவாணி
மகா வித்தியாலயம்
சரஸ்வதி ஆலயம்


காரைதீவு முருகன் ஆலயம்


குருக்கள் மடம் ஐயனார் ஆலயம்


குருக்கள் மடம் மட்/கலைவாணி
மகா வித்தியாலயம்
சரஸ்வதி ஆலயம்



கல்லடி திருச்செந்தூர் ஆலயம்


கல்லடி திருச்செந்தூர் ஆலயம்


குருக்கள் மடம் அம்மன் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொன் விழா குறித்து வாழ்த்துகிறோம்.





## பண்டிதர் கார்த்திகேசு (கவிஞர் சேந்தன்)



சிவப்பணி செய்து சிவன் திருவடி சென்ற
சேந்தன் ஐயாவுக்கு அஞ்சலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org